தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. | ருதிரோத்காரி ௵ மாசி ௴ | பகுதி 11

திரியுள்ள எண்ணெய் விளக்குக்கள்

Oil Wick-Lamps

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி, B. A., B. L., எழுதியது.

இருளை நீக்கி ஒளியைத் தருவதற்காக உபயோகிக்கப்படும் இக்கருவிகளை மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கலாம். அவையாவன—எண்ணெய் விளக்குக்கள், மெழுகு வர்த்திவிளக்குக்கள், மின்சார விளக்குக்கள்.

அவற்றுள் திரியுள்ள எண்ணெய் விளக்குக்களைப் பற்றி இங்கே சிறிது கூறுகிறேன்.

எண்ணெய் விளக்குக்களைச் சாதாரணமாக மூன்று வகையாகப் பிரித்துச் சொல்லலாம். பந்தங்கள், சாதா விளக்குக்கள், சிம்மினி விளக்குக்கள், என்று அவை மூவகைப்படும்—எவ்வாறென்பது கீழே சொல்லப் போகிற விஷயங்களால் தெரியவரும்

ஒவ்வொரு விளக்குக்கும் மூன்று விஷயங்கள் இன்றியமையாதவை—அவை எண்ணெய், திரி, காற்று என்னும்

இம்மூன்றும்.

விளக்கில் எண்ணெய் தான் நின்று எரிந்து ஒளி தரும் பொருள். திரியானது எண்ணெய்யை ஏற்று வேண்டிய அளவு எரியச் செய்வதற்கு உபயோகமாகும் கருவியாகிறது. காற்றுத்தான் எண்ணெய் எரிவதற்கு முக்கியமான துணைப் பொருள்.

எண்ணெய் இல்லாவிடின் திரியாகும் துணியோ, அல்லது பஞ்சிழையோ, வெகு சீக்கிரத்தில் முற்றிலும் எரிந்து கரியாய்ப் போய்விடும்; அல்லது நேரே எரியாது கரிந்து அவிந்து போகும். திரி இல்லாவிடின் விளக்கு ஒரு அளவாய் எரியாது, எண்ணெய் ஒரே அடியாய்த் தீப்பற்றி, எரிந்து ஆபத்தையே விளைவிக்கும். காற்று இல்லாவிடின் விளக்கு எரியவே எரியாது. மூச்சைப் பிடித்தால மனிதர் இறப்பதுபோலவே விளக்கும் காற்றில்லாவிட்டால் அவிந்துபோகும்.

மேற்கூறிய மூன்று பொருள்களை ஒட்டியே முன்னே கூறிய மூன்று பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன.

பந்தங்களும், தீவட்டிகளும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவையாகும். அவற்றுள் எரி பொருளாகும் எண்ணெய்யை வைப்பதற்கென்று தனியாக வேறு பாத்திரம் கிடையாது. எண்ணெய் வேறு திரி வேறாக வைக்கப்படாமல் திரியானது எண்ணெய்யில் நனைந்து எண்ணெய்யைக் கசிந்து கொண்டிருக்கும். திரியானது பந்துபோலிருப்பதால் இவற்றிற்குப் பந்தம் என்று பேர்போலும்.

நமது வீடுகளில் ஆதிக்காலம் தொட்டு உபயோகிக்கப்பட்டு இப்பொழுது வர வர மிகவும் குறைவாய் உபயோகிக்கப்படும் சாதாரண கைவிளக்குக்கள், குத்து விளக்குக்கள், முதலியவை இரண்டாவது வகுப்பைச் சார்ந்தவையாகும். அவற்றுள் திரி வேறு எண்ணெய் வேறாக இருக்

கவேண்டிய ஏற்பாடுகள் உள்ளன. திரியின் ஒருநுனி எண்ணெய்யில் தோய்ந்திருக்கும்; மற்றொரு நுனி எண்ணெய்க்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டிருக்கும். இந்த நுனிதான் கொளுத்தப்படுவது. எண்ணெய்யானது திரியின்வழி அதன் நுனியை அடைந்து அங்கே எரிந்து ஒளி தருகின்றது.

சிம்மினிகள் உள்ள விளக்குக்களே மூன்றாவது இனத்தைச் சேர்ந்தவை. சிம்மினியின் உதவியால் எண்ணெய் சரியாக எரிவதற்கு இன்றியமையாத காற்றானது, போதிய அளவு, ஒழுங்காக எரியும் திரியின் நுனியை அடைகிறது. அதனால் விளக்கு அதிகப் பிரகாசத்துடன் எரிகிறது. சிம்மினி இல்லாத விளக்குக்களின் சுடர்கள் மெல்லிய காற்றால் அதிகம் இங்குமங்கும் அசைவதால் அவை தரும் ஒளியானது ஒரே அளவுள்ளதாய் இருப்பதில்லை, ஒரே இடத்திலும் நேரே அமர்ந்து படிவதில்லை. சிம்மினி உள்ள விளக்குக்களில் அவ்வாறின்றி, சுடர் அநேகமாக அசைவின்றியே ஒளி வீசுகிறது.

இனி விளக்கு எப்படி எரிகிறது என்னும் விஷயத்தைக் கவனிப்போம்.

விளக்கிலுள்ள எரிபொருளாகும் எண்ணெய்யானது ஒரு இரசாயனப் பொருள். அதில் கார்பன் எனப்படும் கரிப்பொருளும், ஹைட்ரஜன் என்னும் நீர் வாயுவும் ஆகிய இரண்டு தனிமூலப்பொருள்கள் (Elements) தாம் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றுள் முன்னது கட்டிப்பொருள் (Solid : நிலம்) பின்னது காற்றுப்பொருள் (Gas : கால்)

இவை இரண்டும் காற்றில் காணப்படும் ஆக்ஸிஜன் என்னும் பிராணவாயுவோடு இரசாயன முறையில் கலக்கும் தன்மையன.

விளக்கை ஏற்றும்போது எண்ணெய் சூழ்ந்த திரியின்

நுனியில் எரியும் தீக்குச்சியை நாம் வைக்கிறோம், அப்படி நாம் இரண்டையும் பொருத்தும்போது தீக்குச்சியிலுள்ள தீயின் சூட்டினால் திரியின் நுனியிலுள்ள எண்ணெய் ஆவியாகிறது. அந்த ஆவியில் மேற்கூறிய கரிப்பொருளும் நீர் வாயுவும் மிகுந்திருக்கின்றன. அவை இரண்டும் ஆக்ஸிஜனோடு கலந்து எரியும் தன்மையை உடையனவாதலின் அவை எரிகின்றன. எரிவதற்கு வேண்டிய அளவு பிராண வாயுவைக்காற்றிலிருந்து எடுத்துக்கொள்ளுகின்றன. காற்றுப் போதிய அளவு இல்லாத இடத்தில் விளக்கு எரியாது. கரிபபொருளும் நீர் வாயுவும் பிராண வாயுவோடு இரசாயன முறையில் நெருங்கிச் சேர்வதையே நாம் எரிவது என்று சொல்லுகிறோம்.

இவ்வாறு இவை பிராணவாயுவோடு நெருங்கிச் சேரும்போது மிகுந்த சூடு உண்டாகின்றது. மேலும் திரியாகும் துணியும் தீச்சுடரின் தீயால் சிறிது சிறிது எரிகின்றது. ஆகவே திரியின் நுனியிலுள்ள எண்ணெய் ஆவியாக மாற மாற வேறு குளிர்ந்த எண்ணெய் திரியின் நுனியை அடைந்து, அங்கே திரியின் சூட்டாலும் அண்டையில் எரியும் கரிப்பொருள் நீர்வாயு இவற்றின் சூட்டாலும் ஆவியாகமாறி, மேற்கூறியபடி பிராணவாயுவுடன் கலந்து எரிகிறது. இது தான் விளக்கு எரியும் முறை. இனி விளக்கில் எப்படி ஒளி உண்டாகிறது என்பதைக் கவனிப்போம்:—

மேலே சொன்னபடி விளக்கு எரியும்போது எரியும் கரிப்பொருளும் நீர் வாயுவும் மிதமிஞ்சிய பிராணவாயுவுடன் கலந்து எரிந்தால், அவை சிறிது ஒளி தான் தரும். அவ்வொளியும் மங்கிய நீல நிறமாக இருக்கும். ஆனல் மிகுந்த சூட்டை உடையதாயிருக்கும்.

ஆனால் சாதாரணமாக இவ்வளவு மித மிஞ்சிய பிராணவாயு காற்றிலிருந்து விளக்குக்குக் கிடைப்பதில்லை. ஆகையால் எண்ணெயிலுள்ள எரியக்கூடிய கரிப்பொருள் முற்றிலும் பிராணவாயுவோடு கலந்து எரிந்து போவதில்லை. அதில் ஒரு சிறு அளவு முற்றிலும் எரிந்து அதிகச் சூட்டைத் தருகிறது. மற்றது அச்சூட்டினால் வெளுக்கக் காய்ச்சிய இரும்பு போல் நிறம் வெளுத்து தக தக வென்று ஜொலிக்கிறது. இதனால் தான் விளக்கு பிரகாசிக்கிறது. இந்த அளவு பிராணவாயுவு கூட எரியும் விளக்குக்குப் போதியபடி கிடைக்காதிருந்தால் கரிப்பொருள் முற்றிலும் சூடுண்டு வெண்மை நிறத்தை அடையாது தன் இயற்கைக் கரு நிறத்தைத்தாங்கி விளக்கின் ஒளியை மங்கச் செய்கிறது.

விளக்கின் திரியை அதிகம் உயர்த்திப் பெரிதாக்கினால் அளவுக்கு மிஞ்சிய கரிப் பொருள் ஆவியாகி விடுவதாலும், விளக்கின் திரியை மிகவும் தாழ்த்தினால் சாதாரணமாய் உண்டாகும் கரிப்பொருளைக்கூடச் சுடச்செய்து வெண்மையாக்கப் போதிய சூடு விளக்கில் இல்லாது போவதாலும், இவ்விரண்டு தடவைகளிலும் விளக்கு அதிகம் கரியேறி ஒளிமங்கி போகிறது.

ஆகையால் வெள்ளொளி தரும் ஒவ்வொரு விளக்கிலும் சரியான அளவுள்ள நல்ல காற்று திரிப்புறம் வந்து எரியும் திரியை அடைவதற்கு வேண்டிய உபாயங்களைக் காணலாம். திரிக்குக் கீழ் உள்ள துவாரங்களும் மேல் உள்ள சிம்மினியும் இந்த முக்கியமான உபயோகத்திற்கென்றே வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையால் தான் சிம்மினி இல்லாத விளக்குகளைக் காட்டிலும் சிம்மினி உள்ள விளக்குகள் மிகுந்த ஒளியைத் தருகின்றன.

பாரிஸ்டர் பஞ்சநதம்

நாடக பாத்திரங்கள்

பஞ்சநதம்:—ஒரு புதிய பாரிஸ்டர்.
காந்திமதி:—அவர் மனைவி.
உலகம்மாள்.—அவள் தாய்.
சுடலை:—அவர்கள் வீட்டு வேலைக்காரன்
முல்லர் துரைசானி:—அயல் வீட்டுக்காரி.

மூன்றும் காட்சி

இடம்:—முதற்காட்சி நிகழ்ந்த முல்லர் துரைசானி வீட்டுமாடம்.

காலம்:—மாலை ஐந்துமணி.

அரங்கநிலை:—முல்லர்துரைசானியும் பாரிஸ்டர்பஞ்சநதமும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முல்லர் துரைசானி:—என் மகளைப்பார்க்கவென்று நீர் திரும்பியும் வந்ததைப்பற்றி எனக்கு மெத்த ஸந்தோஷம், மிஸ்டர் பஞ்சநதம். அவள் கண் இன்னும் சுகப்படவில்லை. இருட்டுக்குமுன் வெளிவரக் கூடாதென்று டாக்டர் கண்டிப்பாய் உத்திரவு செய்திருக்கிறார்.

பஞ்சநதம்:—மிஸ் முல்லருக்கு நேர்ந்த விபத்தைக் கேட்டு நான் அதிகம் வருந்துகிறேன். தங்கள் மகள் வந்

திருக்கிறளென்று இன்று கேட்டதுமுதல், பார்க்கவேண்டு மென்ற பேராசை கொஞ்சமில்லை. இவ்வளவு வயதாகி யும் நீங்கள் இப்படியிருக்க, அவள் எப்படி யிருக்கமாட் டாள்!

முல்லர்:—ஓ! நீர் ஸ்தோத்திரம் பண்ணுகிறீர், ஸ்தோத்திரம் பண்ணுகிறீர். துஷ்டராயிருக்கிறீர், வெகு துஷ்டர் (சிரிக்கிறுள்.)

பஞ்ச:—(சிரித்துக்கொண்டு) அப்படி யொன்றுமில்லை, அம்மா! கேவலம் உண்மையையே சொல்லுகிறேன். நம்முடைய நாட்டிலே, லண்டன், பாரி முதலிய நகரங்களி லேயும் பிற இடங்களிலும், நான் எத்தனையோ சீமாட்டி களைப் பார்த்திருக்கிறேன். உங்களைப்போன்ற கம்பீரமும் உத்தம லக்ஷணங்களும் உள்ளவரைப் பார்த்ததேயில்லை. வளர்ந்த தாய்மரமே இப்படியிருந்தால், இளங்கன்று எப் படியிராது ?

முல்லர்:—நீர் சுத்தவம்புக்காரர், துஷ்டர்; நான் காந்தி யிடத்திற் சொல்லிக் கொடுக்கிறேன் பாரும்.

பஞ்ச:—அவளுக்கென்ன தெரியும்? சுத்தநாட்டுப புறம்! நாகரிகமே யில்லை. தங்கள் மகளெங்கே, அவ ளெங்கே!

முல்லர்:—ஒரு நிமிஷம் மன்னித்துக் கொள்ளும்: ஒருவேளை ஸாரா வெளியே வருவாளா என்று பார்க் கிறேன். [உள்ளே போகிறுள்.]

பஞ்ச:—(தனிமொழி) சரி! சரி! காரியம் பலிக்கலாம். இந்தச் சீனுவேல் பழமையானது; அந்தப் படமும் அந்தச் சிலையும் மிகச் சிறந்தவையே! இவையெல்லாம் இருக்க இவள் பணக்காரியா யிருக்கவேண்டும்.

[முல்லர் துரைசானி திரும்பி வருகிறுள்.]

முல்லர்:—அவள் கிரம்ப வருந்துகிறாள்! ஆனால் டாக்டர் உத்திரவு மிகக்கண்டிப்பாம்; அவள் கண்ணும் கூசுகிறதாம். 'சூரியன் அஸ்தமித்து இருட்டிய பின்பு நான் வெளியேவந்து தோட்டத்தில் உலாவலாமென்றிருக்கிறேன்; அப்பொழுது வேண்டுமோயின் பார்க்கலாம்' என்று சொல்லுகிறாள். நான் வீட்டில் இருக்க மாட்டேன்; இதோ நோரன் துரைசானி வீட்டுக்குப் போகிறேன்; திரும்பிவர இரவு எட்டு மணியாகும். ஆனால், நீர், என்ன, நாணயஸ்தரே; என் காந்தியின் புருஷரே; நீர் தனியே அவளைப்பார்த்தால் தான் என்ன? உம்மை நம்பலாமோ, கூடாதோ?.

பஞ்ச:—ஹா! ஹா! ஹா! என்னையா? நானென்ன அவ்வளவு தூர்த்தனா என்ன?

முல்லர்:—அதுதான் நானும் சொல்லுகிறேன்.

பஞ்ச:—ஆயிரம் வந்தனம், அம்மா! தங்களுக்கும் தங்கள் மகளுக்கும் ஆயிரம் வந்தனம்! நான் கிளப்புக்குப் போய்விட்டுத் திரும்பும் வழியில், ஆறரை மணிக்கு மேல் வந்து மிஸ் முல்லரைப பார்க்கிறேன். ஹா! ஹா! ஹா! என்னை நம்புகிறதா? ஆனாலும், இது நமக்குள் இருக்கட்டும்: நான் ஒரு ஐரோப்பியப பெண்ணை விவாகம் செய்து கொள்ளுகிறதென்று தீர்மானித்து விட்டேன்.

முல்லர்:—உம்முடைய மனைவி காந்தியோ?

பஞ்ச:—சீ! அவள் சுத்த நாட்டுப்புறத்து முண்டம்! பழங்கர்நாடகம்! நாகரிகமே யில்லை. என் படிப்பு ஒழுக்க வழக்கங்களுக்கு அவள் சிறிதுமே பொருத்தமில்லை.

முல்லர்:—உலகமே இப்படித்தான்; உள்ளதைக்கொண்டு திருப்தியடைவதே கிடையாது; எப்பொழுதும், எல்லோருக்கும், இக்கரைக்கு அக்கரை பச்சையே.

பஞ்ச:—நீங்கள் ஏதோ தத்துவம் ஓதுகிறீர்கள்.

நமக்கெல்லாம் பிடியாதது. இளம்பிராயமே. எல்லாம் ஆடி யோடி அநுபவித்து முடிந்தால், ஒருவேளை எனக்கும் தத்துவஞானம் தோன்றலாம். இப்பொழுதோ, ஐரோப்பிய நாகரிகமும், ஐரோப்பியப் பெண்களின் நடை உடை பாவனைகளுமே பிடித்திருக்கின்றன.

முல்லர்:—எல்லாம் சீக்கிரம் தெரிந்து கொள்வீர் உண்மையை; எனக்கு நேரமாய்விட்டது. நோரன்துரை சானி காத்திருப்பாள்.

பஞ்ச:—நான் கிளப்புக்குப்போய் வருகிறேன், தங்கள் மகளிடம் ஆறரை மணிக்குமேல் வந்துபார்க்கிறேன் என்று தயைசெய்து சொல்லுங்கள். ஹா! ஹா! ஹா! என்னை நம்பலாமா வா?,

[திரைவிடல்.]

நான்காம் காட்சி

இடம்:—முல்லர் துரைசானி வீட்டுத்தோட்டத்தில் ஒரு பூம்பந்தர். ஒரு தோட்டப்பெஞ்சு மட்டும் போட்டிருக்கிறது.

காலம்:—இரவு ஏழுமணி.

அரங்க நிலை:—பாரிஸ்டர் பஞ்சநதமும், மிஸ் முல்லராக அவர் மதித்த ஒரு பெண்ணும், பெஞ்சியின் மீதிருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப்பெண் துரைமகளைப் போலவே ஆடைதரித்தவள்; அவளுடைய இடது கண்ணும் முகத்தில் ஒரு பகுதியுமட்டும் கறுப்புத்துணியால் மூடிக்கட்டப்பட்டிருக்கின்றன.

பஞ்சநதம்:—இந்த தயவை என்றும் மறக்கமாட்டேன். பல்லாயிரம் வந்தனம் அளிக்கின்றேன். கண்ணேவைக் கூடப் பாராட்டாது என்னைக் காண இசைந்தது என் பாக்யமே. நான் ஸொப்பனத்திலும் எதிர்பாராத அளவு என் மனம் பூரிக்கின்றது. முல்லர் துரைசானியின் மகள் என்றால் திவ்யஸௌந்தரியாய் இருப்பளென்றே எண்ணினேன்; எனினும், இவ்வளவு பேரழகை நானுமே எதிர்பார்க்கவில்லை.

துரை மகள்:—பரஸ்பர ஸம்பாஷணையிலே ஒருவரை யொருவர் பற்றிப் பேசலாகாதென்பது நாகரிகவழக்கம் இல்லையா? வேறு எதையாவது பற்றிப் பேசுவோமே.

பஞ்ச:—ஸாதாரணமான ஸமயங்களுக்கே வழக்கம், ஸங்கேதம் எல்லாம். இதைப்போன்ற விசேஷ ஸமயங்களுக்கல்ல.

து. ம:—என், இப்பொழுது இங்கே என்ன கொள்ளை போகிறது?

பஞ்ச:—நிமிஷத்துக்கு நிமிஷம், உன்னைக்கண்டது முதல், என் மனமே கொள்ளை போகிறது; உன் பேரழகும் இனிய குரலுமே கொள்ளைக்காரர். நானும் ஆசியா ஐரோப்பா இரண்டு கண்டங்களைப் பார்த்தாய்விட்டது; பாரி நகரத்துப் பேரழகிகளையும் பார்த்திருக்கிறேன்; இத்துணை அதிரூபலாவண்யத்தை இதுகாறும் கண்டதேயில்லை. இப்படிப் பேசுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். மிஸ் முல்லர், என்மேல் கோபம் கொள்ளலாகாது. நான் வேண்டுமென்று, இப்படி நினைத்துப் பேசவில்லை; உன் அழகே என்னை இப்படி ஆட்டிவைக்கின்றது. ஒரு கண்ணும் முகமும் பாதி மறைந்திருப்பது என் அதிர்ஷ்டமென்றே நினைக்கின்றேன். ஏனெனில், ஸம்பூர்ணஸௌந்தரியத்தையும் கண்டுவிட்டால், என் இரு

தயம் எப்பாடுபடாது! இடது நேத்திரத்துக்கு எப்படி விபத்து நேர்ந்ததென்று கேட்கலாமோ?

து. ம:—தெருவில் ஒரு பையன் கவண்டெறிந்துக் கொண்டிருந்தான். ஒரு கல் என் கண்மேல் பட்டு விட்டது.

பஞ்ச:—அப்படியா! டாக்டர் என்ன சொல்கிறார்? கண்ணுக்கு ஒருவித அபாயமுமில்லையே?

து. ம:—இல்லை; அநேகமாய்க் குணமாகிவிட்டது; கொஞ்சம் கூச்சம் மட்டும் இன்னும் இருக்கிறது. ஒரு வேளை, ஸ்திரமாக, சிறிது சுளிப்பு,—மாறுகண்போல,—இருக்கலாமென்று டாக்டர் சொல்லுகிறார்.

பஞ்ச:—அப்படியானால், முகத்தின் இயற்கை அழகை அது அதிகப்படுத்தவே செய்யும்.

து. ம:—அடுத்தவீட்டுக் காந்திமதியின் இடது கண் போல எனக்கும் ஆகிவிட்டால் ஸந்தோஷமே.

பஞ்ச:—யாரு, என் மனைவியா? சீ! அவள் ஒரு நாட்டுப்புறத்து முண்டம். இவர்களுக்குள்ளே, அதாவது இந்த நாட்டுப் பட்டிக்காட்டு அநாகரிகமுண்டங்களுக்குள்ளே, மாறுகண் அதிர்ஷ்டமென்று நினைப்பதுண்டு. அவள் மாறுகண் தான் அதிர்ஷ்டத்தையே விளைத்துவிட்டது.

து. ம:—ஏன், அவளுக்கென்ன? தந்தை இறந்து விட்டாலும், ஏராளமான சொத்தை வைத்துவிட்டுப்போயிருக்கிறார்; நீரே அவள் கணவராக வாய்த்திருக்கிறீர். இதை விட என்ன அதிர்ஷ்டம் வேண்டும்?

பஞ்ச:—நான் கணவனா? நான்தான் வேறு விவாகம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டேனே. இந்த நாட்டுப் புறத்து முண்டங்களோடு வாழ என்னால் முடியுமோ?

நல்ல நாகரிகமும் படிப்பும் பேரழகும் சேர்ந்து பொருந்திய,—உன்னைப் போன்ற ஓர் ஐரோப்பியப் பெண்ணால்,

து. ம:—என் பேச்சை விட்டுவிடும் என்கிறேனே—உம்மவர்களை ஏன் இப்படிப் பழித்து வெறுக்கிறீர்? அவர்களுடைய ஒழுக்கவழக்கங்கள் பல மிகவௌகரியமாகவே இருக்கின்றன.

பஞ்ச:—நீ அப்படி நினைத்தால், நான் இனிப் பழிக்கவில்லை. இனி, நீ இட்டதே எனக்குச் சட்டம்.

து. ம.—அதிலென்ன பிரயோசனம்? உண்மையில் உம்மவர் வழக்கங்களிலுள்ள கெடுதி யென்ன?

பஞ்ச:—மூன்றாண்டுகளுக்கு மேலாக நம்ம சீமையிலும் பாரி முதலிய நகரங்களிலும் வசித்தபின்பு, இவர்களுடைய பாதி அம்மணமான ஆடைகளும், காட்டு மனிதரைப் போல் தரையிற் குந்துதல், கைகளால் உண்ணுதல், போன்ற வழக்கங்களும் எனக்குப் பிடிக்கவேயில்லை.

து. ம:—ஏன், உம் தாய் நாடு இந்தியாதானே? இல்லையோ?

பஞ்ச.—இங்கே தான் பிறந்தேன்; ஆனால் இங்கிலாந்தின் மேல்தான் என் ஆசையெல்லாம்; அதையே என் ஜன்ம பூமியாக நினைக்கிறேன்.

து. ம:—இருந்தாலும், நீர், இங்கே பிறந்து வளர்ந்தவரே, இங்கேயே வாழப்போகிறீர்; இது இங்கிலாந்தைப் போல் குளிர்ந்த தேசமில்லை; அங்கே உடுக்கும் உடையை இங்கே உடுத்தால் தேக அசௌக்கிய முண்டாகாதா? அது பொருந்துமா?

பஞ்ச:—ஒரு வேளை ஆடைவிஷயத்தில் பேதம் அவசியமாயிருக்கலாம். எனினும், 20வது நூற்றாண்டிலே நாகரிக மனுஷ்யருக்குரிய உடை வேண்டாமா?

து. ம:—அரையில் வெள்ளை வேஷ்டியும் லாங்கோட்டும் தலைப்பாகையும் அநாகரிகமா என்ன? நாகரிகமென்பது மேலாடையை மட்டும் பொறுத்த தொன்றோ? இழுக்கமான பளுவான இந்த ஆடையின்றி, இவ்வூர்க்குப் பொருத்தமான ஒரு ஸாரியை உடுத்திக்கொண்டு, பாதங்களை நசுக்கி வருத்தும் பூட்ஸின்றி யிருந்தால், நான் காட்டு மனுஷி யாகிவிடுவேனோ?

பஞ்ச:—கந்த லுடுத்தாலும் பீதாம்பர முடுத்தாலும் ரம்பை ரம்பையே!

து. ம:—இப்படிப் பேசுவதை நிறுத்தினாலொழிய, நான் போய்விடுகிறேன்.

பஞ்ச:—இல்லை, வேண்டாம்; இனியில்லை; இதை மட்டும் மன்னிக்கவேண்டுகிறேன். ஆடையென்பது அந்த அந்த தேசத்தின் சீதோஷ்ணஸ்திதியைப் பொறுத்தது என்றும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், கையால் சாப்பிடுவதைப்பற்றி என்ன அபிப்பிராயம்? அதுவும் நாகரிகம் தானோ?

து. ம:—என் அபிப்பிராயம் எப்படி யானாலும் அதையேன் காட்டுத்தனமாக மதிக்க வேண்டும்? ஹிந்துக்களின் ஆசாரப்படி அடிக்கடி கைகளைக் கழுவுவதால், கையால் சாப்பிடும் வழக்கம் எங்கள் வழக்கத்தைவிட சுத்தமான தென்றே கொள்ளலாம். துரைமார் வீட்டுக் குசினிக்குள் எப்பொழுதாவது போய், அங்குள்ள பாத்திரங்களின் நிலைமையையும், அசுத்தங்களையும், சில வேளை அவசரத்தில் பட்லர் மேட்டி இவர்கள் தங்கள் எச்சிலையே துப்பிப் பீங்கான்களைத் துடைப்பதையும், நீர் பார்த்திருக்கிறீரோ?

பஞ்ச:—நான் பார்த்ததில்லை.

து. ம:—பார்த்திருந்தால் இப்படிப் பேசமாட்டீர்.

தீனி மேஜைக்கு வரும்பொழுது, எல்லாம் மாசு மறுவற்ற வெள்ளாடையும் பளபளப்பும் தான்; அதற்குமுன், குசினிக்குள் நுழைந்து பார்த்தால் தான், குட்டு வெளிப்படும். அன்றியும், பலருக்குப்பொதுவாக அநேகம் பீங்கான் கத்தி கரண்டிகளை 'வைத்துக்கொண்டு வித்தியாசமின்றிச் சாப்பிடுவது, எவ்வளவு அரோசிகமானது, சுகாதார முறைகளுக்கு விரோதமானது என்பதும்; வாழை முதலிய இலைகளிலோ, அவரவர்க்குப் பிரத்யேகமான பாத்திரங்களிலோ உங்களைப்போல் சாப்பிடுவது எவ்வளவு சுகாநுகூலமானது என்பதும் உமக்கு விளங்கவில்லையா?

பஞ்ச:—எங்களவர் 'கட்சிக்கு மிஸ் முல்லரே சிறந்த வக்கீல்.

து. ம:—அதிருக்கட்டும்: உங்களவர்க்குள் இன்னும் என்ன அநாகரிகமான வழக்கமிருக்கிறது;

பஞ்ச:—பெண்களுக்கு உரிய சுதந்தரம் கொடுப்பதில்லை; அவர்களை மரியாதையாய் நடத்துவதில்லை; அடிமைகளைப் போல் நடத்துகிறார்கள்.

து. ம:—நான் ஒரு கேள்வி கேட்கலாமோ?

பஞ்ச:—ஆக்ஷேபமென்ன? விடையளிக்கத் தயாராய்க் 'காத்திருக்கிறேன்.

பஞ்ச:—உம்முடைய மனைவியை விட்டுவிட்டு வேறு விவாகம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னீரே, இது நாகரிக நடத்தையா?

து. ம:—நான்,—இது,—அவள்,—மிஸ் முல்லருக்கு என் மனைவியை நேரில் தெரியுமோ?

பஞ்ச:—அவளையா? என்னை எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு காந்திமதியையும் தெரியும். பால்ய

முதல் நாங்கள் உயிர்த் தோழிகளாயிற்றே.

பஞ்ச:—ஆனால், இதை யோசித்துப்பார்; உன்னைக் கண்டது முதல், இதோ அரைமணிநேரத்துக்குள், உன் அழகையும், வாக்கு சாமர்த்தியத்தையும், சாதுரியத்தையும், பயிற்சியையும் கண்டு, என்காதல் மலைபோல் வளர்ந்துவிட்டதே! உன் சில வார்த்தைகளால், எங்களவர் மீது நெடுநாளாக எனக்கிருந்த வெறுப்பு நீங்கிவிட்டதே! இப்படிப்பட்ட ஒரு மனைவிமட்டும் எனக்கு வாய்த்திருந்தால், நான் சொப்பனத்திலும் வேறு விரும்புவேனோ, நினைப்பேனோ?

து. ம: அவளிடத்தில் இல்லாத எதை, நீர் என்னிடத்தில் காண்கிறீர்? அவளென்ன, அழகில் குறையா?

பஞ்ச:—அழகேயில்லையென்று, நான் சொல்லவில்லை; ஆனால், மனோகரமான இந்தக்கலையும் சௌந்தர்யமும், இன்னதென்று சொல்லமுடியாத வசீகரசக்தியும் அவளிடத்தில் எங்கே காண்பது?

து. ம:—இந்த ஐரோப்பிய உடையா உம்மை இப்படி மயக்குகிறது?

பஞ்ச:—ஓ! மிஸ் முல்லர்! எப்படி நான் இன்னதென்று சொற்களில் எடுத்துரைப்பேன்? தவிரவும், இப்பொழுது நாம் பேசிக்கொண்டிருக்கிறோமே, இந்தஸம்பாஷணை, இப்படிப்பட்ட நவரஸம் பொழியும் மூளை விருந்தை அவள் எனக்கு அளிக்கத்தக்கவளோ?

து. ம:—நீர் அவளுடன் இப்படிப் பேசிப்பார்த்தீரோ? நான் இதுவரை சொன்னதெல்லாம், எங்கள் ஸம்பாஷணைகளில் அவளிடம் நான் கற்றுக்கொண்டதே. என் தாய் நினைக்கிறபடி, ஐரோப்பியர், இந்தியர், இருவர்க்குள்ளும் சில நல்ல வழக்கங்களும் இருக்கின்றன, சில கெட்ட வழக்கங்களும் இருக்கின்றன; ஆனால், ஒருவரையொருவர்

இகழ்ந்து, தம்மையே மேலாக நினைப்பதற்குச் சிறிதும் காரணமில்லை.

பஞ்ச:—உன் தாயின் மனோ விசாலத்தை நான் கவனித்தேன், நீ அவளுக்கு ஏற்ற மகளே. உன்னைக் கண்ணுற்ற தக்ஷணமே என் மனத்தைக் காதல் கொள்ளையாடி விட்டது. இனி உன் அடிமையே நான். ஓ ஸாரா! என்னை மன்னித்துக்கொள், மிஸ் முல்லர். என்மேல் இன்னும் காதல் பிறக்காவிட்டாலும், சிறிது இரக்கமாவது காட்டக் கூடாதா?

[முழந்தாள்பணிந்து, அவள் கைகளைப்பிடித்து முத்தமிடுகிறார். அவள் கைகளைத் திமிறி இழுத்துக்கொள்கிறாள்.]

து.ம:—என்ன, என்ன, இது? என் தாய் என்னை எச்சரித்துப் போனாள்; ஆனால், நீர் இப்படிச் செய்வீரென்று நான் எண்ணவில்லை. இது மெய்தானோ? போலிக்காதல் இல்லையே? பாசாங்கில்லையே? உம்முடைய மனைவியைப் போல என்னையும் சிறிது காலத்துக்குப்பின் தள்ளிவிட மாட்டீரே?

பஞ்ச:—கடவுள் ஸாக்ஷியாக, பஞ்ச பூதங்கள் ஸாக்ஷியாக, ஸத்தியமாக,—

து. ம:—நீர் பிரமாணம் செய்யவேண்டாம். எந்த ஸத்யம் உம்மைக் கட்டுமோ, எது கட்டாதோ, அறியேன் நான்; இதைப்போல, உம் மனைவியிடத்திலும், நீர் உம்முடைய காதலின் உண்மையைப்பற்றி இதுவரை ஸத்யம் செய்து கொடுத்ததே யில்லையா? நன்றாய் நினைத்துப் பார்த்துச் சொல்லும்.

பஞ்ச:—[சிறிது திகைத்து] நான் நம்மூர்க்குப் போகு முன்,—

து. ம:—இதுவே உம் ஜனனபூமி.

பஞ்ச:—மன்னிக்க; நான் இங்கிலாந்து போகுமுன், அவள்மேல் ஆசையுண்டென்று நினைத்திருந்தேன். ஆனால், ஐரோப்பாவில் தங்கியபின், என் எண்ணங்கள், அபிப்பிராயங்கள் எல்லாம் முற்றிலும் மாறிவிட்டன. இப்பொழுதோ, என் அபிப்பிராயங்களை யெல்லாம் மீண்டும் நீ திருப்பி மாற்றிவிட்டாய். இனி என் மனம் மாறவே மாறாது. நீயே என் உயிர்நிலை,

து. ம:—இந்த என் கவுனு, லேஸ் காளா, பூட்ஸா, தொப்பியா, எது உம் உயிர்நிலை?

பஞ்ச:—ஓ, ஸாரா! இப்படியும் பேசுகிறாயே, நீ! உலகெல்லாம் கூடினும் ஒப்பாகாத, ஈடெடுப்பில்லாத, இந்தத் தங்கக்கட்டியே என் உயிர்நிலை. [திடீரென்று அவளைத் தம்மார்போடு சேர்த்துக் கட்டிக்கொள்கிறார்,— அவள் திமிறுவதில், தொப்பியும் மேல் கவுனும், கண்ணை மூடிய கறுப்புத்துணியும், நழுவி விழுந்து விடுகின்றன. அந்தத்துரைமகள், பட்டுஸாரியுடுத்திய அவர் மனைவி காந்திமதியாக நிற்கிறாள்.]

[திரைவிடல்]

முற்றிற்று.

கோழை.

The Coward.

கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீ. உ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.

தண்டமிழ் நண்பரீர், தண்டமிழ் நண்பரீர்,
மண்டலம் இகழும் பண்டமில் கோழைதன்
தன்மையைப் பயனைச் சாற்றுவன் கேளீர்:
எவன் இவ்வுலகத் தெல்லாச் செயலையும்

தன்னல முழக்கோல் தன்னால் அளப்பவன்:
தன்னையே ஒப்பப் பிறரையும் 'தந்நலம்
கொண்டவர்' என்றீண் டெண்ணும் குணத்தவன்:
பிறருக் குதவுதல் என்னும் பேச்சைக்
கேட்பினும் அச்சம் கொண்டுமெய் விதிர்ப்பவன்:

நல்லோர் குழுவுக் கென்றுமே காதவன்:
அவனே கோழை. அந்தோ! அவனால்
யாதுசெய் தற்காம்? யாங்கவன் மானத்
தோன்றினர் கோழைஅத் தோம்உறு குலமும்
குடியும் வகையும் படியும் பெரும் பேறு

எய்துவ தெங்ஙன்? இயலா தொருதலை.
ஆதலின் அப்பழி அகற்றி
மீதலத் தோங்கி மிளிர்ந்துவாழ் வீரே.

---

* இது, ஹிந்திபாஷையில் ஸ்ரீதர் பாடக் என்ற ஒரு பெரியார் எழுதிய காயர் என்ற தலைப்பில் வரும் சிறுபகுதியின் கருத்தைத் தழுவி எழுதப்பட்டது.

மதிப்புரை

Review

"குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொள்ளல்."

கதா சந்திரிகை: [மயிலாப்பூர்-வருஷசந்தா உள்நாடு 2-8-0
வெளிநாடு 3-8-0]

நீதியும், சுவையும், இனிமையும் நிறைந்து மக்களது நிலைமையை மேம்படுத்துதற்கென்று சிறந்த மேதாவிகளால் எழுதப்பட்டுப் பாஷைக்கும் நாட்டுக்கும் ஒருங்கே சிறப்பை அளிக்கும் கற்பனைக்கதைகள் பல ஆங்கில பாஷையில் இருக்கின்றன—அதுபோல் நமது பாஷையிலும் அழகிய கதைகள் எழுதப்பட்டுப் பாஷையும் நாடும் புகழ்பெறவேண்டுமென்பது தமிழ் அபிமானிகள் யாவரும் விரும்பத்தக்க விஷயம். இத்தகைய நோக்கத்துடனே தொடங்கப்பட்டிருக்கும் கதாசந்திரிகை என்னும் பத்திரிகையின் முதற்பகுதி எமக்குக்கிடைத்தது. இப்பகுதியில் வஸந்த குமாரி, ராதாமனோஹரன் என்ற இரு கதைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அவை மாதா மாதம் தொடர்பாக வெளிவருமென்று தெரிகிறது. கதைகளும் பிறவும் எளிய நடையில் சுவைபொருந்த எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் பிரபஞ்சவர்த்தமானங்கள் என்ற தலைப்பின் கீழ் மதம், இராஜரிகம், கல்வி, கைத்தொழில் முதலிய துறைகளுக்குரிய செய்திகளுள் முக்கியமானவற்றை மாதம்தோறும் தொகுத்து வெளியிடுவதும் இப்பத்திரிகையின் நோக்கங்களுள் ஒன்றென்பதூ தெரிகிறது. இவை தவிர பழைய சங்க நூலுள் ஒன்றாகிய குறுந்தொகையும் சில குறிப்புக்களுடன் மாதா மாதம் சிறிது சிறிதாக வெளிவருமென்றும் தெரிகிறது. இதன்பத்திராசிரியர் ஸ்ரீமான் B. A. பாஷ்யம் அய்யங்கார் B. A. L. T. ஆவர்.

அ.

ஸர் ஐஸாக் ந்யூட்டன்
Sir Isaac Newton

ஸ்ரீ B.A., பாஷ்யமையங்கார் B.A., L.T., எழுதியது.

(204-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பள்ளிக்கூடத் தொல்லையினின்றும் விலகுவது ந்யூட்டனுக்குப் பரம சந்தோஷமெனினும் வயலிற்சென்று பயிர்த் தொழிலைக்கவனிக்க அவனுக்குச் சிறிதுமிஷ்டமில்லை. தாயார் சிறுவனை ஒருவேலைக்காரனுடன் கூட்டிக் க்ராந்தம் சென்று கடை வியாபாரத்தை யொட்டிய சாமான்கள் வாங்கியும் விற்றும் வரும்படி திட்டஞ்செய்து அனுப்புவாள். ஐஸாக் அந்நகரையடைந்ததும், தனக்குத்தாயிட்ட வேலையைச்செய்யும்படி வேலைக்காரனுக்கேபணித்து, எல்லாப் பொறுப்பையும் அவன் வசமே ஒப்புவித்துத், தான் படித்த காலையில் தங்கியிருந்த வீட்டையடைந்து, புத்தகமுங் கையுமாய் இருப்பது வழக்கம். சிலநாட்கள் கழிந்தபின் ஐஸாக் தன் வேலைக்காரனைமட்டில் க்ராந்தத்திற்கு அனுப்பிவிட்டு, சாலையில் தங்கி ஒரு வேலிமறைவில் படித்துக்கொண்டாவது, வேறேதாவது செய்துகொண்டாவதிருந்து, வேலைக்காரன் கடைவேலையை முடித்துத்திரும்புகையில் அவனுடன் சேர்ந்து தன் ஊருக்குச்செல்வான்.

1658ஆம் ஆண்டினில் பெரும்புயல் எழுந்து நாடெங்கும் கேட்டினை விளைவித்தது. க்ராம்வெல் இறந்த தினத்தில் புயலின் வேகம் மிகவும் கடுமையானதாகவிருந்தது. காற்றின் வேகத்திற்குமாறாகவும் சார்பாகவும் ஐஸாக் குதித்து அப்புயலின் வேகத்தை அளந்தறுதியிட்டதாகக் கேள்விப்படுகிறோம். நீர்க்கடிகாரியந்திரமொன்றமைத்து, அதை க்ராந்தம் மனையில் ஸ்தாபித்து, அது சரியாய் ஓடிக்காலத்

தை காட்டுவதற்குரிய ஏற்பாட்டினைச்செய்தான்.

ஐஸாக் தன் வீட்டுச்சுவற்றில் ஒருபுறத்தில் மூளை யொன்றை அடித்து, சூரியவொளியில் அதன் நிழலைக்குறிப் பிட்டுக் காலத்தை அறிந்துகொள்ளுமாறு இரண்டு வட்டங் களை அமைத்திருந்தான். அவற்றுள் ஒன்று பல்லாண்டு கள்வரை உபயோகப்பட்டுவந்தது. இன்றும், ராயல் சொ ஸைடியாரால் புத்தகசாலையில் அவ்வட்டக்கல் பத்திரப் படுத்தப்பட்டிருத்தலையும், அதன்மேலில் மழுங்கிப்போன அவனதுபேர் எழுத்துக்கள் காணப்படுவதையும் காண லாம்.

ஐஸாக்கின் மனம் அத்தகைய விஷயங்களிற் சென்ற தைப்பற்றித் தாய் மிகவும் வருந்தினுள். அவனது வாழ்வு பயனற்ற வேலைகளிற் செல்வதை எண்ணி எண்ணி மனம் வாடினுள். அவள் தன் சகோதரரிடம் சிறுவனைப்பற்றி அடிக்கடி குறைகூறி வருவாள். ஒருநாள் மாமன், தன் மருமகன் வேலையைக்கவனியாமல் ஒரு வேலியின்கீழ் கணக்குங் கையுமாய்ச் சிந்தனையில் ஆழ்ந்திருத்தலைக்கண் டார். உடனே அவர் தன் உடன்பிறந்தாளை அடைந்து பையனைப் பள்ளிக்கனுப்பும்படி கூறினுர். அவளும் அவ் வுரைக்கிசைந்து ந்யூட்டனைப் பள்ளிக்கூடத்திற்கனுப்பி னுள். பிள்ளையும் தன் பாடங்களைச் செவ்வையாய்ப்படித்து அவனினும் மிக்கான் ஒருவனுமிலனென்று யாவருமகொ ண்டாடும்வண்ணம் தன் கல்வியறிவாலும் நடத்தையாலும் போதகாசிரியரை மகிழ்வித்துவந்தான். படிப்பு முடிந்து அவன் சாலையைவிட்டு நீங்குஞ்சமயத்தில் மிஸ்டர் ஸ்டோக்ஸ் உதவிப் போதகாசிரியர் பலரையும் அங்குப் படித்த மாணவரையுமொருங்குகூட்டி, ஐஸாக்கின் குணத் தையும் திறமையையும் வியந்து வாழ்த்துரைத்து விடை யளித்தனுப்பினுர்.

ஐஸாக் அப்பால் கேம்ப்ரிட்ஜ் நகருக்குச்சென்று ட்ரினிடி கல்லூரியிற்சேர்ந்து படிக்கலானார். அங்குச்சென்ற பின்னரே அவரது அறிவு விரிந்து வளர்ச்சிபெற்றது. அக்கல்லூரியில் அவர் சேர்ந்தபோது லத்தீன், க்ரீக் மொழிகளிற் சிறிது ஞானம் பெற்றிருந்தார். அவர் தம் சொந்த முயற்சியால் தெரிந்துகொண்ட சில விஷயங்களைத்தவிர, கணிதத்திலும் பூதபௌதிக நூல்களிலும் விசேஷமாய் ஒன்றும் அறிந்திருந்தவரல்லர். தன அறியாமையை நன்குணர்ந்து ஐஸாக் இராப்பகல் ஓயாமல் உழைத்துவரலானார். அவர் தர்க்கநூலினையும் கெப்லர் எழுதிய ஆப்டிக்ஸ் நூலினையும் விரைவிற்படித்து முடித்தார்; அதனால் அந்த நூற்சம்பந்தமான பிரசங்கங்களைக் கல்லூரியில் சுவனியாது வேறு பாடங்களைப் படித்துவரலாமென்று அநுமதியைப்பெற்றார். அப்பால் ஐஸாக் யூக்ளிட் எழுதிய நிலவளவை நூலையும் டேகார்டே எழுதிய நிலவளவை நூலையும் படிக்கத்தொடங்கினார். யூக்ளிட்டைக்கற்பதில் அவருக்குச்சிறிதும சிரமந்தோன்றவில்லை. டேகார்டைப் படிப்பதில் அவருக்கு முதலில் கஷ்டமாயிருந்ததெனினும் ஐஸாக் மனச்சோர்வடையாமல் படித்து அந்நூல் முழுவதையும் கிரகித்துக்கொண்டார். கணிதசாஸ்திரத்தில் அவருக்கிருந்த உற்சாகத்தை இவ்வளவென்று சொல்லி முடியாது. அவர் கணித சாஸ்திர சம்பந்தமான விஷயங்களை ஆராய்வதில் வன்மைபெற்று நூதனமான பல அரிய விஷயங்களைக் கண்டறிந்தார். கணிதநூற்பயில்வோர் கல்லூரிகளிற் கற்கும் அரும்பாகத்தை (Binomial Theorem) முதன் முதல் கண்டுபிடித்தவர் ஐஸாக் ந்யூட்டனே. அவர் தமது இருபத்திரண்டாம் பிராயம் பூர்த்தியாகுமுன் (Differential Calculus) மிகவும் அருமையானதும் கணித நூல் வல்லோரிற் சிலரே அறியக்கூடியதுமான ஓர் பகுதியை ஆராய்ந்து வெளியிட்டார். அவரது உழைப்பின்

பயனைக்கண்டறிந்தவற்றைப் பிரசுரப்படுத்தி அதனால் பெரும்பேர்படைக்க வேண்டுமென்னும் எண்ணம் ந்யூட்டனுக்கு உதிக்கவேயில்லை. தமக்கு அதில் இயற்கையாய் அமைந்த ஆர்வமே தம்மை உந்தியதால், அவர் தம்காலத்தை அவ்வருமுயற்சியிற் செலவிட்டுவந்தார்.

1664-வது ஆண்டினில் ஐஸாக் வானநூலிற் கருத்தைச் செலுத்தத்தொடங்கிக் கிரகங்களைப்பற்றியும் அவற்றின் சலனகதியைப்பற்றியும் ஆராய்வாராயினர். அவர் சந்திரமண்டலத்தை ஊன்றி நோக்கிக் கவனிக்கையில் சந்திரனைச் சுற்றிலும் பல நுண்ணிய சிற்றுக்களிருத்தலைக் கண்ணுற்று அவற்றினியல்பையும் அவை உண்டாகும் வகையையும் பரிசோதிக்கத்தொடங்கினர். பல வர்ணங்களோடும் ஒளி வீசிய அக்கற்றைகள் ஒளியின்மீது மேகசீர்த்திவலைகள் சம்பந்திப்பதால் உண்டாகின்றனவென்றும், அவை ஒரே அளவினவாயிருக்கையில் நிறைந்த காந்தியுடன் விளங்குவனவென்றும் ந்யூட்டன் கண்டுகொண்டார், நிலவைத்தொடர்ந்து வீசும் இவ்வொளிக்கற்றைக்கும் வானவில்லில் விட்டொளிக்கும் காந்திக்கும் உள்ள வித்தியாசத்தை உதாரணவாயிலாகப் பரீக்ஷித்தறிந்தார்.

அதே வருஷத்தில் ஐஸாக் வால் நக்ஷத்திரமொன்றை ஆழ்ந்து கவனித்தார். அப்போது அவர் தமது சிரமத்தையுங் கவனியாமல் வெகுநேரமளவும் அதே வேலையாய் இருந்தமையால் அவர் வியாதியுற்று அதனால் உடல் மெலிந்தார். அவருடைய நுண்ணறிவைக்கவனித்த அதிகாரிகள் அவருக்கு உபகாரச்சம்பளம் அளித்தனர். பின் அவர் பி. ஏ. பட்டமும் பெற்றுத் தமது படிப்பில் சிறந்து விளங்கினர். கேம்ப்ரிட்ஜ் கலாசாலையில் முதன் முதல்கணிதநூல் புலவராய்ச் சிறந்து விளங்கிய டாக்டர் ஐஸாக்பாரோ என்பவருடன் ந்யூட்டன் நெருங்கிப் பழகத்தொடங்

அவர் செய்துவந்த ஆராய்ச்சியில் தம்மாலான உதவியைப் புரிந்து அவரது நன்மதிப்பைப்பெற்றார். தாமியற்றிய நூலின் முகவுரையில் பாரோ ந்யூட்டனின் உதவியைப் புகழ்ந்துரைக்குமிடத்து, தான் பிழைத்த பலவிடங்களில் திருத்தங்கள் செய்தும் தமக்கும் விளக்கமுறாத பல நூதனமான அரிய விஷயங்களைக்கூட்டியும் உபகரித்த ந்யூட்டனின் பெருமையைக் கொண்டாடி வரைந்திருக்கிறார். ந்யூட்டன் அவ்வளவு சிறுவயதில் கணிதம், வானநூல், ஆப்டிக்ஸ் முதலிய பல துறைகளிலும் மிகவுஞ் சிறப்புற்றிருந்ததை நோக்கின் அவரை ஒரு பெரிய மேதாவியென்று கொள்ளச் சிறிதும் தடையில்லை.

ந்யூட்டன் இருபத்துமூன்று பிராயமடையுமுன்னமே அவரது கீர்த்தி எங்கும் பரவலாயிற்று. 1665-ஆம் வருஷத்தில் கேம்ப்ரிட்ஜ் நகரில் கொள்ளைநோய் உண்டாகவே ந்யூட்டன் கல்லூரியைவிட்டு நீங்கித் தன் கிராமத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அவர் ஊல்ஸ்தார்ப்பிற்குச் சென்றபின் தான் படித்தறிந்தவற்றைச் சிந்தனைசெய்து ஆராய்ந்து வந்தார். அக்காலத்தில்தான் அவருடைய மனத்தில் கிரகங்களின் சலன சக்தியைப்பற்றிய எண்ணம் முதன் முதல் தோன்றியது. இதற்கு முன்னரே ஹூல்கென்ஸ் என்னும் அறிஞர் ஒருவர் கிரகசலன சக்தியைப்பற்றிய நியதிகளைக் கண்டுபிடித்திருந்தனரெனினும் ந்யூட்டனுக்கு அவை இதுவரை மறைபொருளாகவே இருந்தன. தன் முயற்சியால் யூகித்தறிந்தே நூதன விஷயங்களை அறிவது இயற்கையாயிருந்தது. கிரகங்கள் சூரியனைச்சுற்றுவதற்குக் காரணமின்னதென்று ஆராய்வதில் ந்யூட்டனுக்கு முன்விளங்கிய பல பொருளறியும் நூற்பரிசோதகர் முயன்று வந்தனரெனினும் அவர்களுக்குப் பல உண்மைகள் விளங்காமலேயிருந்தன.

(இன்னும் வரும்)

அரசன் வைரியைத் தம்வைரியாக்கொண்டு மெய்ம்மறந்து யுத்தம் புரிவர். போர்வெறிகொண்டு தம்மையும் மறந்து எதிரிகளை அடக்கி மாய்க்கும் கொடுந்தொழிலாளர்க்குப் போர்க்களமே மலர்ப்பாயலாகும். இந்திய நாடு முழுதும் பிரயாணம் செய்து தாம் ஆழ்ந்து கண்டுணர்ந்த விஷயங்களை உள்ளபடி எழுதி வெளியிட்ட மெகஸ்தனிஸ் என்னும் அந்நிய நாட்டு யாத்திரிகர் அக்காலத்துப்போர் முறையைப்பற்றிப் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:

"நாடு வறுமையால் நலியாதபடி காத்தற்கு இந்தியர் அநுஷ்டிக்கும் முறைகள் சிலாகிக்கத்தக்கனவாம். இதர நாடுகளில் போர்மூளுமாயின் மறவர் செருமுனையில் நின்று போராடுவதோடமையாது கிராமங்கள்தோறுஞ் சென்று ஆங்காங்கு உழுதுண்டுவாழும் ஏழைக்குடிகளின் பயிர் நிலங்களைப் பாழாக்கி அவர்களைத் துன்புறுத்திக் கொடுமையிழைப்பர்; அதனால் நாடெங்கும் பஞ்சம் பெருகி உயிர்கள் பல்லாண்டுகள்வரை உணவின்றி வருந்திமடிதல் இயற்கையாயிருக்கிறது; ஆனால் இந்தியர்க்குள் சமர்விளையுமானால் நாட்டுமக்கள் தமது தொழிலுக்கு யாதொரு விக்கினமுமின்றிச் சுகவாழ்வு வாழ்ந்து வருவர். பழுதிலதாகிய உழவுத்தொழிலின் ஏற்றத்தையும் தூய்மையையும் நன்கறிந்து அதைக் காத்துவந்தமையின் பண்டைக்காலத்து விளைந்த போரில் மறவர் நாட்டுமக்களை வாட்டி வதைத்திலர். ஊர்க்கருகே அமர்க்களத்தில் போர்வெறி கொண்டு இருதிறப்படை வீரரும் பகைவர் மீது வீழ்ந்து படைகளைவீசி ஆயிரக்கணக்காக மடித்துப் பிணங்களைக் குவித்துக் கொண்டிருப்பர்; ஆயினும் அயலூர்களில் நிலவுரிமைபூண்டு வாழும் உழவர் போர் நடுக்கமின்றிச் சமாதானத்தோடு தம் தொழிலை நடாத்திவருவர். அங்ஙனமே மாற்றார் நாட்டில் சென்று நிலத்தை அனலுக்கும் நீருக்கும் இரையாக்கலும், பயிர்களையும் பூண்டு

களையும் மரங்களையும் வேரற அழித்தலும் அக்காலத்துப் போர்வீரரின் செய்கையன்று. உழுதற்றொழில் வல்லாரே னையதொழில்கண்மேற் செல்வார் யாவரையும் தாங்குதலால் உலகத்தார்க்கு அச்சாணி போன்றிருப்பர். இவ்வுண்மையை உணர்ந்தே போர் நிகழுங்காலத்து அத்தகையார்க்கின்னல் உண்டாகாவாறு அக்காலத்தவர் போர்செய் விதிகளை முறைப்படுத்தியிருந்தனர்." "புராதன இந்தியா" —மெக்ருடில்.

இரேக்கவாசிரியர் மேலெழுந்தவாறு கூறியிருத்தலாலும், பண்டையநூலாசிரியர் தத்தமிலக்கிய நூற்களினிடையே குறித்துள்ள அகச்சான்றுகளாலும் சங்ககாலத்துத் தமிழர் கல்வியும் நாகரிகமும் சிறப்புறவாய்ந்தவரென்பதும், உயிர்களிடத்து அருளும் அன்பும் மிகுதியுமுடையவரென்பதும், மறத்தொழிலும் நியாயமும் நடுநிலையுந் தவறாத நேர்மையுடையர் என்பதும் நன்கு விளங்கும்.

ஆயினும் சிற் சில சமயங்களில் பகைநாடு சென்று ஊர்களைச் சுட்டெரித்தலும் வயல்களைக் கொள்ளையிடுதலும் பகைவருடைய பொருள்களைக் கவர்வதும் அக்காலத்து விளங்கிய மறவர் செய்கை என்பதைச் சில புறப்பாட்டுக்கள் வலியுறுத்தும்.

'செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி யடர் புகர்ச்
சிறுகண் யானை செவ்விதி னேவிப்
பாசவற் படப்பை யாரெயில் பலதந்
தவ்வெயிற் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையி னல்கி
... ...
வாடுக விறைவ நின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்தலானே' (புறம்—6)

'எல்லையு மிரவு மெண்ணாய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை' (புறம்-7)

'வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறை நீர்க் களிறுபடீஇ
யெல்லுப்பட விட்ட சுடுதீவிளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்றப்
புலங்கெட விறுக்கும் வரம்பி றானை' (புறம்-15)

'பிறர்நாடு கொள்ளுங் காலை யவர்நாட்
டிறங்குகதிர்க் கழனிநின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூ ரெரியு நக்க' (புறம்-57)

முதலிய செய்யுட்களைக்காண்க. பகைவருடைய நாட்டையும் அரண்களையும் அழித்துக் கழுதை யேரால் உழுது வரகு, கொள் முதலியவற்றை விதைத்தல் வழக்கென்பதை வலியுறுத்தும் புறப்பாக்களும் உள.

'நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்
தணங்குடை மரபி னிருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளைவரகுங் கொள்ளும் வித்தும்' (புறம்-392)

'கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்'
(புறம்-15)

பண்டைக்காலத்தில் மகளிர்க்கும் நாட்டபிமானமும் வீரமும் தீரமும் உண்டென்பது சங்கநூல்களை ஆராய்ச்சி

செய்வோருக்குத் தெள்ளிதின் விளங்குவதாம். வாட்புண்மிகுந்த உடம்பையுடைய கணவனைக்கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வீழ்த்தலாகிய உவகைக்கலுழ்ச்சித் துறையில் அமைந்த புறப்பாட்டுக்கள் பலவுள. உதாரணமாக,

‘நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோன் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

(புறம் 278)

‘கடல்கிளர்ந் தன்ன கட்டூர் நாப்பண்
வெந்துவாய் மடுத்து வேறலைப் பெயரித்
தோடுகைத் தெழுதருந் ஆரந்தெறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கி
யிடைப்படை யழுவத்துச் சிதைந்துவே றாகிய
சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி
வாடுமுலை யூறிச் சுரந்தன
வோடாப் பூட்கை விடலை தாய்க்கே’

(புறம் 295)

என்னும் புறச்செய்யுட்களைக்காண்க. வீரத்தாயொருத்தி, தன்மகன் போரிற்சலித்துப் புறங்காட்டியோடி உயிர் தப்பியது கேட்டுச்சினந்து மானமழிந்து பகைக்கஞ்சி படையைச் செருமுனையிலெறிந்து ஓடிய புல்லனைப் புதல்வனாகப் பெற்றமைக்கு மிகவும இரங்கி அத்தகையானின் வளர்ப்புக்குக் காரணமாயிருந்த நகில்களை அரா

ளால் அறக்கெறிதவே முறையென்று வெம்மொழி பகர்ந்து செருமுனையடைந்து பிணக்குவியலை வாண்முனையால் கிளறிப்பார்க்கையில் தன்மகன் தலைவேறுடல்வேறாகக் காயத்துடன் வீழ்ந்திறந்திருத்தலைக் கண்டு அவ்வீரப் புதல்வனைப் பயந்தநாளிலடைந்த மகிழ்ச்சியினும் பன்மடங் கதிகமான மகிழ்ச்சியை அடைந்தனள்.

(புறம் 278)

வீரமகனொருவன் தன்னை நோக்கிக் கடல்போல் மோதிப்புரண்டு வந்த தானையை அதமாக்கிப் பகைவர் குழாத்திடைச்சென்று தன் உயிரைத்துரும்பென மதித்துப் பொருது மடிந்ததைக் கேள்வியுற்ற தாய்க்கு மகிழ்ச்சி மிகுதியால் வறண்ட தனங்கள் பால் சுரக்கும் பெற்றியுவாயின. (புறம் 295)

'கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற்கிவ டன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்றசெரு விற்கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
யொருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே'

(புறம் 279)

என்னுஞ் செய்யுளில் வீரமகளொருத்தி முதல்நாள் நடந்த சமரில் தந்தையை இழந்தும் மறுநாள் தன் தந்தை மரித்ததாலாய வருத்தத்தைச் சிறிதும் நோக்காது காதற் கொழுநனைக் களத்துக்கனுப்ப உடன்பட்டனள். அன்று நடந்த யுத்தத்தில் கணவனும் உயிர்துறந்தனன்.

பின்னும் போர்ப்பேரிகை முழக்கங்கேட்டு அவள் முதலில் சிறிது மயங்கினாளேனும் இழந்த துணிவை மீண்டும் பெற்றுத் தன் ஒரே புதல்வனை விளித்து அவனது கையில் வேலினைக் கொடுத்துத் தைலமிட்டுத் தலைமயிரைக் கோதிமுடித்து வெள்ளாடை புனைவித்துப் போர்க்களஞ் சென்று மடியும்படி ஊக்கமெழுப்பி அவ்விளைஞனைச் செருமுக நோக்கிச் செலுத்தியவாறு கூறப்பட்டிருக்கிறது.

'ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
யொளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'
(புறம் 312)

என்னும் புறச்செய்யுளில் தாய், தந்தை, கொல்லன், வேந்தன், காளை என்னும் ஐவரது கடனையும் மிகவும் அழகாக வெளியிட்டிருத்தலைக் காணுமிடத்து தமிழ் மறவர் மாண்பும், அவரிளமையிற் பெற்றுவந்த பயிற்சியின் மேன்மையும், அவரையீன்ற மகளிர் வீரமும், அவர்நாட்டிற் சிறப்புற்று விளங்கிய வேந்தன் ஆற்றலும் இனிது விளங்கும். மறக்குடியிற் பிறந்த மக்கள் தமது அரசருக்காகத் தாம் இழைத்த தர்ம யுத்தங்களையே இலக்கியமாகவும் வாழ்க்கைப் பெரும்பயனாகவும் எண்ணியிருந்தனர்.

எதிரில்லாதபடி சினமும் ஆண்மையும் மேன்மேலேறு நின்ற குடியொழுக்கத்தினை உயர்த்திச் சொல்லுதலாகிய ஏறுண் முல்லைத் துறைக்குதாரணமாகிய

'முன்னின்று னெந்தை கணவன் களப்பட்டான்,

முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்-பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
யெய்போற் கிடந்தானென் னேறு'

என்னும் புறப்பொருள் வெண்பா மாலைச் செய்யுளில் பண்டைய தமிழ் மறவர் புகழ் விளங்குதல் காண்க. தன்னை நெருங்கி வினவியவற்கு விடையாகத் தாயொருத்தி 'நின் மகன் எவ்விடத்துளன் என்று வினவுகின்றனை. அவன் உள்ளவிடம் யாதென்றறியேன். புலிகிடந்துபோன கன் முழை போன்ற அவனைப்பெற்ற வயிறோ இதோ உள்ளது. அவன் செருக்களத்தின்கண்ணே தோன்றுவன். அவனைக் காணவேண்டின் ஆங்குச் செல்க' என்று கூறிய தாகப் பொருள்கொண்ட புறப்பாட்டு விருந்து தமிழ் மற மகளிரின் தேசாபிமானத்தையும் மனத்துணிவையும் நன் கறியலாம்.

'சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
வீன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே'

(புறம்-86)

நமது நாட்டை நோக்கிப் படையெடுத்துவந்த சேனையைக் கண்டு பொருளாய் மறமகளொருத்தி பால்மணமாறாத தன் சிறுபிள்ளையின் கையில் வேலொன்றைக் கொடுத்து களத்திலிறந்துபட்ட முன்னோரின் நடுகல்லை அவற்குக் காட்டி அவனைப் பூசலுக்குச் செல்லும்படி பணித்ததாகக் கூறும்

'வந்த படைநோனாள் வாயின்முலை பறித்து
வெந்திற லெஃகம் பிறைக்கொளீஇ—முந்தை
முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு'

பு—வெ. மாலை. வாகை: 21

என்னும் புறப்பொருள்வெண்பா அக்காலத்திய வீரத் தாய்மாரின் மாண்பைச் சிறப்பித்துக் கூறுவதாகும். இங்ஙனம் தமது குலத்துக்கும் நாட்டுக்கும் பெரும் புகழை நாட்டி விளங்கிப் பெருமையடைந்திருந்த மாதர் சிரோமணிகளை வியந்துபாடிய செய்யுட்கள் சங்கநூல்களில் ஆங்காங்கு விரவியிருத்தலைக் காணலாம். அக்காலத்துப் பெண்டிரின் மனவலிமை இத்துணைச்சிறப்புற்றிருக்குமாயின் ஆடவரின் நிலையும் இயல்பும் கூறுந்தரத்தனவல்ல. அக்காலத்து பெற்றதாயரே தம்மக்களைப்போர்முனைக்கு அனுப்புதல் இயல்பாயிருக்கச் சமீபத்தில் நடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஆட்கள் சேகரித்துப் போருக்கனுப்ப அரசாங்கத்தார் அனுசரித்த முறைகளும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியும் கண்டு ஒப்பு நோக்கற்பாலனவாம். அரசரின் நிர்ப்பந்தமின்றிப் போருக்கெழுந்து பகைவருடன் மலைந்து புகழை நிலைநிறுத்திய தமிழ் மறவரின் அருஞ்செயல்கள் என்றும் மறைவனவல்ல. அவர் உயிர் மாய்ந்தும் பெயர் நிலைநின்றமைக்கு அவருடைய பெரும் நோக்கங்களும் குணங்களுமே காரணமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கவிசிரேஷ்டர் எனப்புகழ்பெற்றுப் பின்புள்ளார்க்கு மாதிரிச்சட்டமாயிருந்து புதிய கவிசம்பிரதாயத்தைத் நிறுவிய வோர்ட்ஸ்வோர்த் என்னும் ஆங்கிலகவி தாமியற்றிய * 'நன்மறவனியல்' என்னும் செய்யுளிற்கூறிய உத்தம லக்ஷணங்கள் யாவும் தமிழ்

* Character of the Happy Warrior

யானை முருகனுக்குக் கொடுத்தனர். அவ்வாறே அசுரரை அழித்த பிறகு, முருகன் தன் கையிலுள்ள வேலை நோக்கி; "நமக்கு எல்லாந் தந்தது இவ்வேல்" என்றனன். அருகிருந்த அயன், "இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ?" என்று கூற, முருகன், நம் கை வேலுக்கு நீ கொடுப்பதொரு சக்தி உண்டோ?" என்று கோபித்து, "இங்ஙனங் கூறிய நீ மண்ணிடைச் செல்வாய்" எனச் சபித்தனன். இச்சாபத்தால் அயனுக்குப் படைத்தல்தொழில் நீங்கியது; அதனால் ஏனை யிருவர்க்கும் காத்தல்தொழிலும், அழித்தல்தொழிலும் இல்லாது போயின. பிள்ளையார் சபித்தலாலே நான்முகன் மண்ணிடைத் தோன்றி மயங்கினன், மறுபடியும் அவனைப் பழைய நிலையிலே நிறுத்தவும், அயன் அரி அரன் என்ற மூவரும் தம்முடைய ஓரிய படைத்தல் காத்தல் அழித்தல் என்னுந் தொழில்களைப் பண்டு போலப் பெற்று நிகழ்த்தித் தலைவராகவும், தேவர்கள் நினைத்தனர். உடனே, இந்திரன், யமன், வருணன், சோமனென்னும் நாற்பெருந் தெய்வங்களையுடைய நந்நகர்கள் நிலைபெற்ற உலகத்தைக் காக்கும் ஒரு தொழிலையே தனக்குக் கொள்கையாக வுடைய திருமால் புறப்பட்டனன். அப்போது நஞ்சோடு கிடந்த துளையினை யுடைய வெள்ளிய எயிற்றினையும், நெருப்பென எழும் நெட்டுயிர்ப்பினையும், கண்டார் அஞ்சும் கடிய வலியினையுமுடைய பாம்புகள் படும்படி புடைக்கும் பல் வரிச் சிறகினை யுடைய கருடன் அவனது நீள் கொடியில் விளங்கினன். பலரும் புகழ்கின்ற திண்ணிய தோளினையும், இமையாத முக்கண்ணையு முடைய முப்புரத்தை எரித்த உருத்திரனும், உமை யொரு பாகத்தே விளங்க வெள்ளேற்றைக் கொடியாக எடுத்துக் கிளம்பினன். ஆயிரங் கண்ணினையும், பல வேள்விகள் வேட்டு முடித்ததனாற்பெற்ற வெ

ற்றியினையு முடைய இந்திரனும் ஏந்திய நான்கு கொம்பு களையும், அழகிய நடையினையும், நிலத்தே கிடந்தசையும் பெரிய வளைந்த கையினையு முடைய ஐராவதத்தின் புறக் கழுத்திலே ஏறிச் சென்றான். ஒரு பொருள் பலவாக மாறு படுவது போலப் பகுத்துக் காண்டற்கண் வேறுபட்டுத் தம் முள் மாறுபா டில்லாத ஆதித்தர் பன்னிருவரும், உருத் திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவருமாகிய நால்வேறு இயல்பினை யுடைய முப்பத்து மூவரும், பதினெண் கணங்களும் கூடவே புறப்பட்டனர். யாவரும் அன்று கூடிய தோற்றம் உடுக்கள் பொலிவு பெற்றுத் தோன்றின லொத்திருந்தது. அவரது செலவு மீன்கள் உலாவுகின்ற விடத்தைச் சேர்ந்து காற்று எழுந் தாற் போன்றிருந்தது. அவரதுவலி காற்றிடத்தே எழுந்த நெருப்பைப் போன்றிருந்தது. அவரது குரல் நெருப்புப் பிறக்கும்படி உருமேறு இடித்தாற் போன்றிருந்தது. இவர்கள் யாவரும் ஆகாய மார்க்கமாகச் சென்று முருகனை வணங்கித் தமது குறையை முடித்துக் கொள்வதற்கு வந் தனர். அப்போது ஈரமுடைய நெஞ்சாலே எப்போதும் மெல்லிய வார்த்தை சொல்லும் கந்தருவரும் உடன் வந் தனர். அவர்கள் புகையை முகந்தா லொத்த மாசற்ற தூய வுடையினையும், முகைவாய் நெகிழ்ந்த மாலையினையும் தரித்திருந்தனர். மக்களுக் குரிய நோய் இல்லையாக நிரு மித்த உடம்பினையும், மாவின் தளிர் போன்ற மேனியினை யும், கட்கினிய ஒளியினை யுடைய பதினெண் கோவை யாகிய மேகலையை யணிந்த அரையினையு முடைய மாசில் லாத கந்தருவ மகளிரும் அக்கூட்டத்தில் மறு வின்றி விளங்கினர். இங்ஙனம் சேர்ந்த கந்தருவரும் கந்தருவ மக ளிரும் எஃகுச் செவியாலே சுருதியை யளந்து, நரம்பைக் கட்டின சுற்றுத லுறும் வார்க்கட்டினை யுடைய நல்ல யாழி

ன் இசையிலே பயின்றவ ராதலின், அவர்கள் இனிய
கானத்தை வாசித்தனர். யாவர்க்கு முன்னே முனிவர்கள்
திருவுள்ளம் பொருந்தி நடந்தனர். இவர்கள் மா வழி
உடையினர்; அழகிலும் வடிவிலும் நிறத்திலும் வலம்
புரிச் சங்கினை யொக்கும் வெள்ளிய நரை முடியினை யுடை
யவர்; எக்காலமும் நீராடுதலின் அழுக்கற விளங்கும் வடி
வினை யுடையவர்; மான் தோல் போர்த்தவர்; விரதம்
பூண்டு பட்டினி கிடந்ததால் தசை கெட்டு, மார்பின்
எலும்புகள் மேலே தோன்றும் உடம்பினை யுடையவர்;
பொருள் நுகர்தற்கு ஏற்ற பகற் பொழுதுகள் பலவும் உப
வாச மிருந்து கழித்தவர்; பகைமையும் செற்றமும் நீங்
கிய மனத்தை யுடையவர்; பலவற்றையும் கற்றோர் சிறி
தும் அறியாத இயல்பான அறிவினை யுடையவர்; கற்றோர்
க்கு எல்லை யெனக் கல்வியைக் கரைகண்டவர். காமமும்
கடுஞ்சினமும் போக்கின அறிவினை யுடையவர்; தவத்
தால் மெய் வருத்த மிருந்தாலும் மனத்தால் வருத்தம்
சிறிது மறியாத இயல்பினை யுடையவர்; ஒருவரிடமும்
வெறுப்பில்லாதவர்; இவ்வாறு இவர்கள் யாவரும் இறை
வனைக்காணவேண்டி அவ்வாவினன்குடி என்னும் திருப்
பதிக்கு வந்து, பண்டு போலப் பிரமனது தொழில் நடை
பெறுமாறு முருகனை வேண்டி வரம் பெற்றனர்.

IV. திருவேரகம்.

அதுவன்றி, முருகன் ஏரகம் என்ற வூரிலே இருத்
தலு முரியன். அவனை இரு பிறப்பாளராகிய அந்தணர்
இங்கே துதியா நிற்பர். இவ்வந்தணர்கள் தாயும் தந்
தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்
றென்று மதித்த பல்வேறு தொல் குடியிற் பிறந்தவர்.
ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்

றல் என்னும் ஆறுகிய நன்மை பொருந்திய தம் இலக்கணத்தில் வழுவாதவர். 48 ஆண்டு தமது நல்லிளமையை வேதங் கூறிய நெறியிலே போக்கித் தமது பிரமசரியங் காத்தவர்; மூன்று நூல் கொண்டு முப்புரியாக்குதலின், ஒன்பதாகிய நூலைத்தன்னிடங் கொண்ட ஒரு புரி மூன்றாகிய நுண்ணிய பூணூலைத் தரித்தவர்; அறத்தையே எப்போதுங் கூறும் கோட்பாட்டை யுடையவர்; ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்னும் முத்தீயாலுண்டாகிய செல்வத்தினை யுடையவர். இவர்கள் இங்கு இறைவனைத் தொழுங்கால், நீராடும்போது நனைந்த அவரது கலிங்கம் உடம்பிலே கிடந்து உலரும். இவர் மணமிக்க நறிய மலர்களைக் கையி லெடுத்துக்கொண்டு, தலையில் கூப்பிய கையினராய் நின்று, ஆறெழுத்தடங்கிய 'நமோ குமாராய' என்னும் மந்திரத்தை வாய்க்குள்ளே உச்சரிப்பர்; வழிபடும் காலமறிந்து தோத்திரங்களைக் கூறுவர். இதைக்கண்டு இறைவன் பெரிதும் மகிழ்வான்.

V. குன்று தோறாடல்

அதுவன்றி, குன்று தோறுஞ் சென்று ஆடலும் முருகனுக்கு நின்ற குணமாகும். இக்குன்றுகளி லுள்ள கொடுந் தொழிற் குறவர் நெடிய மூங்கிலிலே முற்றின தேனாற் செய்த கள் தெளிவை மலை யிடத்துச் சிறிய வூரிலிருக்கும் தம் சுற்றத்துடன் உண்டு மகிழ்வர்; அந்நிலத்திற்குரிய தொண்டகப் பறையின் தாளத்திற் கேற்பக் குரவையாடுவர். அதனைக் கண்ட மென்தோளினை யுடைய மான்பிணை போலும் குறவர் மகளிரும் குரவை யாடி அசைவர்; அதனைப் பொறாதே செய்யனாகிய வேலன் (முருகன்) தக்கோலத்தைக் கலந்து, நறுஞ் சாதிக்காயை நடுவே யிட்டுக், காட்டு மல்லிகையையும் வெண்டாளியை

யும் பைங் கொடியாலே கட்டின கண்ணியைச் சூடுவான்; நறுஞ் சந்தனத்தை மார்பில் நிறம் விளங்கப் பூசுவான்; சிவந்த ஆடையை அரையில் உடுப்பான்; அவன் காதில் அசோகின் குளிர்ந்த தளிர் அசையும் ; கச்சையைக் கட்டிக் கழலை யணிந்து வெட்சி மாலையையும் சூடுவான் ; குழலையும் கொம்பையும் ஊதிச் சிறிய பல்லியங்களை எழுப்புவான்; கிடாயைப் பின்னிட்டு, மயிலை யேறிக், குற்ற மற்ற கோழிக் கொடியை உயர்த்துவான் ; தான் வேண்டிய வடிவு கொள்வதால், பிள்ளையாயிராது நெடுக வளர்வான் ; தோளிலே தொடியை யணிந்து கொள்வான். அவன் தரித்த மெல்லிய துகில் இடையிலே இறுகக் கட்டிய உதரபந்தத்தின் மேலே செருகப் படாமல் நிலத்தைப் பொருந்தி யிருக்கும். நரம்பு ஆரவாரித்தா லொத்த இனிய குரலினையுடைய சேவித்துப்பாடு மகளிர் அவனுடனிருப்பர். இவனைச் சேவிக்கும் மகளிரும் கூட விருப்பர். இவர்கள் ஆழ்ந்த சுனைகளிற் பூத்த பூக்களை விரலாலே வலிய அலர்த்திக் கட்டிய மண நாறும் மாலையினையும், இதழ் பறித்துக் கட்டிய மாலையினையும் தமது கூந்தலில் சேர்த்தி யிருப்பர் ; இலையை யுடைய நறிய பூங்கொத்துக்களையும், கஞ்சங் குல்லையினையும் தலையிலே அணிந்திருப்பர்; செங்கால் மராமரத்தின் வெள்ளிய கொத்துக்களை நடுவே வைத்துச் சுரும்பு தேனை யுண்ணும்படி தொடுத்த பெரிய அழகினை யுடைய குளிர்ந்த தழையை யுடைய வடங்கள் திருந்திய தமது அரையிடத்து உடுத்திருப்பர். இம்மட நடை மகளிர் மயிலின் சாயலைக் கொண்டவர்கள் இத்தகைய மகளிரது கைகளைத் தனது முழவை யொத்த தடக்கையினாலே தழுவி யெடுத்துக் கொண்டு, முதற்கை கொடுத்து, முருகன் குன்று தொறுஞ் சென்று விளையாடுவான்.

VI. பழமுதிர் சோலை

அதுவன்றி, சிறிய தினை யரிசியைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாக வைத்து, ஆட்டை யறுத்து, கோழிக் கொடியை நிறுத்தி, ஊர் தொறு மெடுத்த விழாவின் கண்ணும் முருகன் இருப்பான்; தன் மேலன்புடையார் ஏத்துதலாலே தன் மனம் பொருந்துதல் வருகின்ற விடத்தினும் இருப்பான்; ஆதிண்டு குற்றியையுடைய விடத்தினும் உறைவான். இன்னும் வேலனிழைத்த வெறியாடு களத்தினும், காட்டினும், பொழிலினும், அழகு பெறும் ஆற்றிடைக் குறையினும், ஆறுகளினும், குளங்களினும், முற்கூறப்படாத வேறு பல ஊர்களினும், முச்சந்தி நாற்சந்தி ஐஞ்சந்திகளினும், புதுப் பூக்களையுடைய கடம்பினும், ஊர்க்கு நடுவி லுள்ள மரத் தடியினும், அம்பலத்தினும் அவன் ஆண்டாண்டு உறைதலு முரியன்.

இனி அச்சம் பொருந்திய அகன்ற நகரின்கண்ணே அவன் உறைதலு முரியன். அங்கே குறமகளிர் மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய கோழிக் கொடியை அமைப்பர்; நெய்யோடே வெண் சிறு கடுகை அப்புவர்; தாம் வழிபடுதற் குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்து வழிபடுவர்; அழகிய மலர்களைத் தூவுவர்; வேறாகிய வடிவினையுடைய இரண்டு துகிலை உள்ளொன்றும் புறமொன்றுமாக உடுப்பர்; சிவந்த நூலைக் கையிலே காப்பாகக் கட்டிக்கொள்வர்; வெண் பொரியைத் தூவுவர்; மிக்க வலி பெற்ற கொழுங் கிடாயின் உதிர மளைந்த வெள்ளரிசியைச் சிறு பலியாக இடுவர்; பல பிரப்பும் வைப்பர்; சிறிய பசு மஞ்சளோடு நறிய சந்தன முதலியவற்றையுந் தெளிப்பர்; பெரிய குளிர்ந்த செவ்வரி மாலையையும், வேறு நறிய குளிர்ந்த மாலைகளையும், தலையொக்க அறுத்து, ஒப்பில்லாதபடி அசையத் தூக்குவர்; செறிந்த மலைப் பக்கத்தி லுள்ள நல்ல வூர்களெல்லாம்

"பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனுஞ் சுரக்கென"

வாழ்த்துவர். நறிய தூபங் கொடுப்பர்; தமது நிலத்திற்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடுவர்; முழங்கும் ஓசையினையுடைய அருவிகளும் இனிய பல்லியங்களும் அப்போது ஒலியா நிற்கும். சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களையுந் தூவுவர்: உதிர மளைந்த சிவந்த தினையினை அச்சம் வரும்படி பரப்புவர். முருகன் உவக்கும் வாச்சியங்களை வாசிப்பர். இவ்விதம் தெய்வ மின்றென்பார் அஞ்சும்படியாக அக்குறமகளிர் பிள்ளையார் வரும்படி ஆற்றுப்படுத்திச் சாந்தி செய்வர். பிறகு வெறியாடுகளம் ஆரவாரிப்ப அதற்கு ஏற்பனவற்றைப் பாடுவர். கொம்புகள் பலவற்றையும் சேர ஊதுவர்; மணிகளைச் சேர அடிப்பர். கெடாத வலி தங்கும் பிணிமுக மென்னும் பிள்ளையார் யானையை வாழ்த்துவர். இங்ஙனம் வேண்டுநர் வேண்டியாங்கு பெற்று நின்று வழிபடும்படியாக முருகன் உறைதலு முரியன்; இஃது யான் அறிந்தபடியே கூறினேன்.

இனியான் முற் கூறிய இடங்களில் அவன் உறைந்தாலுஞ் சரி, பிற இடங்களில் உறைந்தாலுஞ் சரி, முற்பட நீ அவனைக்கண்டபோது, அவனது தெய்வத் தன்மையைக் கண்டஞ்சாமல், அழகு பெற முகம் விரும்பிப் "பெருமையையுடைய மலையரையன் மகள் மகனே! மாற்றோர் கூற்றே! இழையணி சிறப்பினையுடைய காடுகாள் குழவி! அந்தணர் செல்வமே! சான்றோர் புகழ்ந்து கூறுஞ் சொற்களின் ஈட்டமே! வீரர்தம் ஏறே! பலர் புகழ் நன் மொழிப் புலவர்தம் ஏறே! இடுக்கண்பட்டு வந்தோர்க்கு அருள் பண்ணும் சேயே! மண்டமர் கடந்து வென்று அடுகின்ற நினது மார்பிடத்தே பொற் பூண்களை அணிந்தோனே! பரிசிலர்க்கு வேண்டுவன கொடுத்துப்

பாதுகாக்கும் பெரு வள்ளலே! தேவரும் முனிவரும் ஏத்தும் பெரிய திருநாமத்தை யுடைய தலைவ! போரிலே வென்று சூரபன்மாவின் குலத்தை வேரறுத்து மதவலி யென்னும் பெயர் பெற்றோனே! நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை உடையோய்!" என்று முன்னர் இறைவனை எதிர் முகமாக்கி ஏத்துவாய்.—அங்ஙனம் ஏத்திய பிறகு, கையைத் தலைமேலே வைத்து வாழ்த்தி இறைவனது திருவடி நின் தலையிலே யுறும்படி தண்டனிட்டு, "அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்டு ஆறு வடிவினைப் பொருந்தி, நெடிய இமயத்தின் உச்சியில் சரவணப் பொய்கையில் பதுமப் பாயலிலே வளர்ந்த செல்வ! கல்லாலின் கீழிருந்த கடவுளின் புதல்வ! வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ! வளைந்த வில்லைத் தரித்த வானோர் சேனாபதி! மாலைமார்ப! நூலறி புலவ! போர்த் தொழிலில் நிகரற்றோனே! போர் வெற்றியினை யுடைய இளையோய்! தெய்வயானையாருக்கும் வள்ளி நாச்சியாருக்கும் கணவ! வேல் வெற்றியாற் பெற்ற பெருஞ் செல்வத்தினை யுடையோய்! கிரௌஞ்ச கிரியைப் பிளந்த குன்றாத வெற்றியை யுடையாய்! விண் தீண்டும் நெடு வரைகளை யுடைய குறிஞ்சி நிலத்துக்கு உரியோனே! பெறலரும் வீட்டினை யுடைய முருக! அவ்வீட்டைப் பெற வேண்டி நச்சி வந்தோருக்கு அதனை அளிக்க வல்ல பேரிசையாள! பொருந!" என்று அன்மையாக விளிப்பாய். இறைவன் தன்மை யெல்லாம் முற்ற அளக் கறிதல் மன்னுயிர்க்கு அரியது. ஆதலின், யானறிந்து நினக்குக் கூறிய அளவாலே நீயும் பலவாறு கூறிப் புகழ்ந்து, "நினது திருவடியைப் பெற வேண்டுமென்று நினைத்து வந்தேன்," என்று சொல்லி, நீ கருதிய வீடு பேற்றினை விண்ணப்பஞ் செய்வாய். அதைக் கேட்பதற்கு முன்னே, வேறு வேறாகிய பல

வடிவினை யுடைய முருகனைச் சேவித்து நிற்கும் பலரும் ஒன்று கூடி, விழா வெடுத்த களத்திலே பொலிவு பெறத் தோன்றி, "பெரும! அறிவு முதிர்ந்த வாய்மையினை யுடைய இப்புலவன் தான் அளிக்கத் தக்கான். நினது வண் புகழினைக் கூற விரும்பிக், கேட்டோர்க்கு இனியவும், உறுதி பயப்பனவுமான பலவற்றைச் சொல்லி நின்னை வாழ்த்தி வந்தனன்" என்று கூறுவர். உடனே பழமுதிர் சோலை மலை கிழவோனாகிய குரிசில் தெய்வத் தன்மை யமைந்த வலி விளங்கும் தனது வான் தோயும் வடிவுடன் அவ்வவைக்களத்தை அணுகுவான். அவனது மலை நாட்டில் அருவிகள் பல இழுமெனு மோசையுடன் மலையுச்சியி னின்றும் இழிதலைச் செய்யும். அப்போது அவை துகிற் கொடிகளைப் போன்று அசைந்து சென்று அகிலைச் சுமந்து வரும்; பெரிய சந்தன மரத்தை உருட்டிச்செல்லும்; சிறிய மூங்கிலினது பூங்கொம்புகள் தனித்து வீழும்படி வேரைப் பிளந்துகொண்டு போகும்; தேவருலகைத் தீண்டும் நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப்போல வைத்த தேனீக்களின் தண்கமழ் இறாலைச் சிதையப் பண்ணும்; அங்ஙனம் செல்லுங்கால் நல்ல பலாக்களின் முற்றிய சுளைகளும், மலையுச்சியில் வளரும் சுர புன்னையின் நறு மலர்களும் அவற்றில் உதிரும். கருங் குரங்குகளும், கரு முக முசுக் கலைகளும் நீர் பாயும் ஓசையைக் கேட்டு நடுங்கும். புகர் நிறைந்த மத்தகத்தை யுடைய பெரிய பிடிகள் குளிரும்படி அவ்வ நீரை வீசும். பெரிய களிற்றினது வெள்ளிய முத்துடைக் கொம்புகளை அவை உள்ளடக்கிக் கொள்ளும்; பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி மேலேகொண்டு குதித்துச் செல்லும். பொடியான பொன்னைக் கொழித்துக் கொண்டு போகும். வாழையினது அடிமரம் துணியவும், தெங்கினது இளநீர்க்குலை உதிரவும் மோதிச் செல்லும். மிளகு கொடி

யின் பெரிய கொத்துக்களைச் சாய்க்கும். அருவியின் ஒலியைக் கேட்ட பீலியை யுடைய மட மஞ்ஞைகளும் கோழியின் பெடைகளும் வெருவி இரிந்தோடா நிற்கும். வைரங்கொள்ளாத கரிய பனையின் புல்லிய செறும்பை (சிறும்பு) யொத்த கரிய மயிரினை யுடைய உடம்பினையும், வளைந்த அடியினையுமுடைய கரடியும், ஆண் பன்றியும் கல் விண்ட முழஞ்சிலே சேரும். கரிய கொம்பினை யுடைய நல் லேறுகள் முழங்கும்.

முருகன் அவைக்களத்தை அணுகியவுடன், தனது தெய்வத் தன்மையை உள்ளடக்கிக் கொண்டு, மணங் கமழும் தன் பண்டை இளவடிவினைக் காட்டி, "நீ வீடு பெறவந்த வரவை யான் முன்னே அறிவேன். அது நினக்கு எய்துதல் அரிதென்று அஞ்சுதலைப் பரிகரிப்பாய்," என்று அன்புடைத்தாகிய நன் மொழிகளைப் பலகாலும் அருளிச் செய்வான். இருள் நிறக் கடல் சூழ்ந்த உலகத்தே நீ யொருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியை எனத் தோன்றும்படி, விழுமிய பெறலரும் வீடு பேற்றினையும் உனக்குத் தருவன்.

2. பொருநாற்றுப்படை.

முன்னுரை

[பொருநர் என்பார் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம்பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பலராவர். அவருள் இங்குக் குறிக்கப்பட்டவர் போர்க்களம் பாடுபவர். ஆற்றுப்படை யென்பது

ஒருவன் ஒருகொடையாளியின் பால் தான் பெற்ற பெருஞ் செல் வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி, அவரும் அங்கே சென்று, தான் பெற்றவையெல்லாம் பெறுமாறு வழிப்படுத்திக் கூறுவது. ஆறு=வழி; படை=படுத்தல். ஆதலின் பொருநராற் றுப்படை யென்பது பரிசில் பெறக்கருதிய ஒரு பொருநனைப்பரி சில் பெற்றுளொருவன் ஆற்றுப்படுத்திய தெனப் பொருள் படும். இப்பாட்டைப் பாடியவர் முடித்தாமக்கண்ணியார் என்ற புலவர்.]

இப்பாட்டின் கருத்து

இளஞ்சேட் சென்னியின் புதல்வனாகிய சோழன் கரிகாற் பெருவளத்தானிடம் பரிசில் பெற்ற ஒரு பொருநன், தான் திரும்பி வரும்போது, எதிர்ப்பட்ட வேறொரு பொருநனை நோக்கி, அவ்வள்ளலின்பாற் சென்று தான் பெற்றதுபோலப் பெருஞ் செல்வத் தைப் பெற்றுவரும்படி சொல்லுகிறான். இதில் கரிகாற் பெரு வளத்தானது கொடையும், அவன் வீரமும், அவனுண்ட சோணாட் டின் வளமும், காவிரி நதியின் பயனும் நன்றாக விரித்துக் கூறப் பட்டுள்ளன.

உரை நடை.

இடையறாத செல்வவருவாயினை யுடைய அகன்ற பேரூர்களில் விழாக்கழிந்தபின்னாளில், ஆண்டுப்பெறு கின்ற சோற்றை விரும்பாமல் விழாக்கொண்டாடும் வேற் றுப் புலத்தைக் கருதிச் செல்லும் பொருந! பெடை மயில் அருகே நின்ற மயில்போலும் சாயலையுடைய உனது பாடினி கல்விப்பெருமை நிரம்பியுள்ளாள். அவளது கூந் தல் ஆற்றின் அறல் போன்றுள்ளது; அவளது அழகிய நெற்றி பிறை போன்றுள்ளது; புருவம் கொலைத்தொழில் வாய்ந்த விற்போன்றுள்ளது; கடைக்கண் பார்வையினையு டைய கண் குளிர்ச்சி பொருந்தியுள்ளது; வாய் இலவின் இதழ்போன்று, சிவந்து இன்சொல்மொழிகின்றது. குற்ற மற்ற வெண் பற்கள் பல முத்துக்கள் சேர்ந்தாற் போன் றுள்ளன; மகரக்குழை ஊசலாடும் காது மயிரை வெட்டும் கத்தரிகையின் குழைச்சை யொத்துள்ளது; நலங்கிளர்ந்த கழுத்து நாணத்தால் பிறரை நோக்காமல்

கவிழ்ந்துள்ளது; பருத்த தோள் அசையும் மூங்கில் போன்றுள்ளது; முன்கை மெல்லிய மயிரினையுடையது; மெல்லிய விரல்கள் நெடிய மலையுச்சியில் வளரும் காந்தள் போலுள்ளன; உகிர் கிளிவாய்போன்று ஒளிவிடுகின்றது; மார்பு பிறரை வருத்தும் சுணங்கை யணிந்துள்ளது; கொப்பூழ் நீரிடத்துப் பெயரும் சுழிபோன்ற உத்தம இலக்கணம் நிறைந்துள்ளது; இடை உண்டென்று பிறர் உணரக் கூடாத மென்மையை யுடையது; அரையில் பல வண்டினங்களின் இருப்பை யொத்த பல மணி கோத்த வடங்களையுடைய மேகலையுள்ளது; துடைகள் பெரிய பிடியினது கைபோல ஒழுகவந்து, மெல்லிதாகத் தம்மில் நெருங்கி, ஒன்றித்திரண்டுள்ளன; கணைக்காலின் இலக்கணத்திற்குப் பொருந்த மயிர் ஒழுங்கு பட்டு, ஏனை இலக்கணங்களும திருந்தியுள்ளன; கணைக்காலுக்கேற்ற அவளது சிறிய அடிகள் ஓடியிளைத்த நாயினது நாவைப்போன்றுள்ளன. இத்தகைய கேசாதி பாதாந்த மாண்பினையுடைய உனது பாடினி சாதிலிங்கத்தை உருக்கின தன்மையை யொக்கும் செந்நிலத்தே நடந்ததால், அவளது அடிகள் ஞாயிற்றின் வெம்மையாலும், சுக்கான்கல் அழுத்தியதாலும் நொந்து வருத்தமடைந்துள்ளன. அவற்றில் மரம் பழுத்தாற்போன்ற துளும்பு நீரையுடைய கொப்புளங்கள் புறப்பட்டுள்ளன. அவற்றாலேற்படும் வருத்தத்தைத் தாங்கி, நல்ல உச்சிப்போதான சந்தியிலே நடத்தலை அவள் தவிர்தலாலே, நீவிர் இருவரும் நாடோறும் யானை திரிதரும் வழியையுடைய இக்காட்டிடத்தே, வலையை மேலே கட்டினாலொத்த இலையில்லாத இம்மரத்து நிழலினிடத்தே தங்கியுள்ளீர்கள். உனது கையில் பாலையாழ் உள்ளது. அதன் பத்தல் மான்குளம்பழுத்திய இடத்தையொத்து, இரண்டு அருகும் தாழ்ந்து நடுவு உயர்ந்துள்ளது. அதன் மேல், எரிகின்ற விளக்கின் நிறத்தையுடைய தோல் விசித்துப் போர்த்தப்பட்டுள்ளது. இளஞ் சூலினையுடைய செந்நிறப் பெண்ணினது அழகிய வயிற்றில் ஐதாகிய மயிர்

ஒழுங்கு படக்கிடந்தாற் போல, இரண்டு தலையும் கூட்டித் தைத்த மரத்தை இப்போர்வை பொதிதலுறுகின்றது. பத்தலிரண்டும் சேர்த்தற்குத் திறந்த துளைகள் முழையில் வாழும் ஞெண்டுகளின் கண்களைப் போன்றுள்ளன. அவற்றின் வாய் மறையும்படி ஆணிகள் முடுக்கப்பட்டுள்ளன. உண்ணுதற்கில்லாத அதன் வறிய வாய் உவாவிற்கு எட்டா நாளில் தோன்றும் திங்களின் வடிவைக் கொண்டுள்ளது. அதன் கரிய தண்டு பாம்பு தலையெடுத்தாற் போன்றுள்ளது. அதன் வார்க்கட்டுகள் ஒன்றோடொன்று நெருங்கித் திண்ணிய பிடிப்பினைக் கொண்டு, கரிய நிறத்தை யுடைய வளது முன்கையிலுள்ள தொடியையொத்து, விளங்குகின்றன. நீண்ட விசித்தலையுடைய அதன் நரம்பின் தொடர்ச்சி தினையின் அழகிய குத்தலரிசியை யொத்துக், குற்ற மற்று இசைமுற்றுப் பெற்றுள்ளது. அதனழகு மணப்பெண்ணின் அழகைப் போன்றுளது. யாழிற்குரிய தெய்வமாகிய மாதங்கி தன்னிடம் நிற்கும்படி அது இலக்கணம் வாய்ந்துள்ளது. இன்னும், இந்த யாழ் வழிப்பறிக் கள்வர் தம் படைக் கலங்களைக் கைவிடும்படி, அவரது மறத்தினை மாற்ற வல்லது. இப்பாலை யாழின் நரம்புகளைக் கூடத் தழுவியும், உருவியும், தெறித்தும் ஒன்றைவிட்டு ஒன்றைத்தெறித்தும் வாசித்துத் தாளத்திற்குப் பொருந்தச் சீருடைத் தேவபாணிகளை (கடவுள் வணக்கம்) நேர்மையுடன் பரக்கப்பாடி, காடுறையுந் தெய்வங்களுக்காகத் தடாரியையும் மனமகிழ்ந்து வாசித்து, இளைப்பாறிக் கொண்டிருக்கும் யாழும் மிடற்றுப் பாடலும் வல்ல கூத்தர்க்குத்தலைவ! புறத்தார் புகழை அரசவைகளிலே மேம்படுத்தவல்லாய்! பிறர் மனத்துக் கொண்டதனைக் குறிப்பால் அறியவல்லாய்! குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி தாரமென்னும் நரம்பு ஏழின் கண்ணும் உரிமையுடையாய்! வழியறியாது இவ்வழியைத் தப்பி

வேறொரு வழியிற் போகாதே, இவ்வழியில் என்னை நீ கண்டது முற்பிறப்பில் செய்தநல்வினைப் பயனே காண்! யான் கூறுகின்றவற்றை விரும்பிக் கேட்பாயாக! அடுகின்ற பசியாலுழந்த உனது கரிய பெரிய சுற்றமும் நீயும் தொன்றுதொட்டு வந்த பசியைக் கைவிடுதலை வேண்டின், நீட்டித்தலின்றி எழுந்திருப்பாயாக! செல்வமெய்திய யானும், பழுமரத்தை நினைந்துச் செல்லும் பறவையைப் போல, இழுமெனமுழங்கும் கரிகாலன் கோபுரவாசலின் கண்ணே வாயிலோனுக்குக் கூறாமல் புகுந்தேன். அவனது தலைவாசல் நச்சிவந்தார்க்கு அடைக்கப்படமாட்டாது. எனது மிடி தீர்தல் வேண்டிப் புகுந்தவுடனே, அவ்வாயிற்குள்ளே சென்ற உவகையாலே, எனது இளைப்புத் தீர்ந்து போயிற்று. விரிகதிர் வெள்ளி எழுந்த நள்ளிருள் விடியற்காலத்தே, படம் விரித்த பாம்பினது பொறியை யொப்பக் கையினது வடுப்படுக்கிடந்த எனது தடாரியில் தோற்றுவித்த இரட்டைத் தாளத்திற்குப் பொருந்த, ஒரு பாட்டினை யான் பேணிப் பாடினேன். எனது பாட்டு முடிவதற்கு முன்பே, அரசன், தன்னோடு பொருந்திய நட்டாரைப்போல, என்னுடனும் உறவு கொள்ள விரும்பினான்; தான் உபகரித்தற்கு வழியாகிய இரப்பினையே யான் எப்போதும் விரும்பும்படி உபசார மொழிகளைக் கூறினான்; தன் கண்ணிலே காணும்படி தனக்கு அண்ணிதான இடத்திலே என்னை யிருத்தினான்; கண்ணுற் பருகுந் தன்மையை யொத்த கெடாத தன் பார்வையாலே, எனதென்பு மெழுகுபோல் நெகிழும்படி, எனக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தினான்; ஈரும் பேனும் கூடியிருந்து அரசாண்டு, வேர்வையாலே நனைந்து, சறடுகளால் தைக்கப்பட்ட எனது உடையை என்னிடத்தினின்றும் போக்கினான். இஃது இழைபோன வழியென்று கண்ணால் குறித்துப்பார்க்கவாராத நுண்மையவாய், பூத்தொழில்

முற்றுப் பெற்ற தன்மையால் பாம்பினது தோலையொத்த துகிலை எனக்கு உடுப்பதற்குத்தந்தான். தமது அழகிய பாட்டாலும் கூத்தாலும், வார்த்தையாலும், அரசனுக்கு இனிய மகிழ்ச்சியைச் செய்யும் நற்குலத்து ஆயிழை மகளிர், ஓட்டற்ற பொன்னாற் செய்த வட்டில் நிறைய உண்டாரை மயக்கும் கள்ளை,மாடத்திடத்தே மழையெனப் பல்காலும் வார்த்து, எனக்குத் தந்துகொண்டிருந்தனர். வழிபோன வருத்தம்போம்படி நான் அதை நிறையவுண்டு, கள்ளுண்ணப் பெறுகிலே மென்ற என நெஞ்சிற் கிடந்த பெரிய வருத்தத்தைப் போக்கிக்கொண்டேன். இங்ஙனம், எனது மிடி தீர்ந்த பின்பு, அந்திக்காலத்தே அவனது செல்வம் விளங்கும் கோயிலில் ஒரு பக்கத்தே மகிழ்வுடன் கிடந்தேன். வழி நடந்த வருத்தத்தை என்னிடம் சிறிதும் நில்லாமற் போக்கினேன். கள்ளின் செருக்காலுண் டான மெய்ந்நடுக்கமல்லது வேறோர் மனக்கவற்சி சிறிது மின்றித் துயிலுணர்ந்தேன். அவனைக் காண்பதற்கு முன்னாளில் மாலைக்காலத்தில் என்னிடம் நின்ற சொல்லிற் கெட்டாத மிடியையும், அவனைக்கண்ட மறு நாட் காலையில் என்னைக் கண்டவர் 'இவன் நெருநல் வந்த வனல்ல' வென்று மருளுதற்குக்காரணமான வண்டுகள் இடையறாது மொய்க்கின்ற எனது தன்மையையும் யான் கண்டு மயங்கினேன். இது கனவாயிருக்கு மென்று முதலிற் கலங்கிய எனது நெஞ்சு, இது நனவென்றே துணிந்தது. வலிய மிடியாலுண்டாகிய வருத்தம்பொதிந்த எனது சுட்டத்தார் மனமகிழ்ந்தனர். என் பின்னின்ற இளையவர் அரசர்க்குரிய புகழ்களை முற்றக் கற்று, அவற்றைப் பலர்க்கும் சொல்லிக்காட்டினர். அதுகேட்டு அரசன் எங்களைக் கடுக அழைத்து வாருமென்று வாயிலோர்க்குக் கூறினான். யாங்கள் சென்ற பின்பு, இங்கு அணுகவாரு மென்று அரசன் அழைத்தனன. அவ்வாறே சென்று, அக்காட்சியிடத்துச் செய்யும் முறைமைகளை யாங்கள்

செய்து முடித்தோம். பின்பு அறுகம்புல் திரியைத்தின்ற
செம்மறிக்கிடாயினது அழகிய பதமான புழுக்கலில் பரிய
மேல்துடை நெகிழவெந்ததனை விழுங்கென்று அரசன்
எங்களைத் தண்டினன். யாங்களும் அதை உண்டு, இருப்பு
நாராசத்தே கொழுத்த இறைச்சிகளைக் கோத்துச் சுட்ட
கொழுத்த தசைகளின் சூட்டையும் வாயிடத்தே இடத்
தினும் வலத்தினுஞ் சேர்த்தி, வயிரூர ஆற்றித் தின்
றோம். இனிப் புழுக்கின இறைச்சியும், சூட்டிறைச்சியும்
வேண்டாமென்று யாங்கள் மறுத்தபோது, சுவையையு
டைய பல்வேறு வடிவு பெறும் பண்ணியாரங்களைக்
கொண்டுவந்து, அவற்றைத் தின்னும்படி எங்களை அவன்
இருத்தினன். பண்ணமைந்த சிறிய யாழையுடைய ஒள்
நுதல் விறலியர் மார்ச்சனையமைந்த முழவினது தாளத்
திற்கு ஆடும்படி மகிழ்ச்சி தரும் கள்ளை உண்டு பல நாள்
போக்கினோம். ஒரு நாள் சோறாகிய உணவையும் கொள்
வாயாகவென்று எங்களை அரசன் வேண்டிக்கொண்டனன்.
அவ்வாறே, யாங்களும் முல்லைமுகைபோன்ற வரியற்ற
இடை முறியாத அரிசி விரலென்ன நெடுகின, ஒன்றோ
டொன்று சேராத சோற்றையும், பாலைப் பொரித்ததனோடு
கூட்டிய பொரிக்கறிகளையும் கழுத்திடத்தே வந்து நிரம்
பும்படி விழுங்கினோம்; நாளும் அவனை விடாதே இனி
தாக இருந்தோம். இரவும் பகலும் இறைசசியைத் தின்
றதால் எமது பற்கள், கொல்லை நிலத்தையுழும் கொழு
வைப் போன்று, முனை மழுங்கிவிட்டன. இங்ஙனம்
இளைப்பாற இடம் பெறாதே உண்டு வந்ததால், இவ்வுண
வுகளின் மேல் எங்கட்கு வெறுப் பெழுந்தது. ஒரு நாள்
அரசனை நோக்கி, குற்றத்தைச் செய்தெழுந்த பகைவரைத்
திறை கொள்ளும் கூறு பாடுகளெல்லாம் முடியக் கற்ற
செல்வா! இனி மீண்டு எமது பழைய ஊரிடத்தே செல்
லக் கருதினோமென்று யாங்கள் மெத்தெனச் சொன்னோம்.
அது கேட்டு அரசன் கோபித்துக் கொண்டவன் போல
வருத்தஞ் செய்யும் பார்வையுடனே, ‘ எம் திரளைக் கை